
# கூடுதுறை

( புனைகதை )



படைப்பாசிரியர்

முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்

பெரியகுளம் புலவர் து. இராசகோபால் [அருளாளன்]

# கூடுதுறை

(புனைகதை)

படைப்பாசிரியர்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

பெரியகுளம் புலவர். **து. இராசகோபால்** (அருளாளன்)

வெற்றிமொழி

ISBN:978 - 93 - 89384 - 48 - 2

**கூடுதுறை**

**இரா. இளங்குமரன்** ©

முதற்பதிப்பு : 2020 திருவள்ளுவர் ஆண்டு - 2051,
புனைகதை, எழுத்து : 12 புள்ளி, பக்கங்கள் : 64
கணினித் தட்டச்சு : **இதயன் அம்மா**

வெளியீடு
**வெற்றிமொழி வெளியீட்டகம்,**
எண்.9, இந்தியன் வங்கி கீழ்தளம்,
ஹோட்டல் டால்பின் அருகில், சத்திரம் தெரு,
திண்டுக்கல் - 624 001.
அலைபேசி : 9715168794
மின் அஞ்சல் : vetrimozhibooks@gmail.com
வெளியீட்டாளர் **இரா. தமிழ்தாசன்**

**விலை : ரூ.60 /-**



## இரா.இளங்குமரன் (1930)

**இயற்பெயர்:**

ரா. கிருஷ்ணன். இது வடமொழிப் பெயராதலின், மதுரை அழகர்கோயிலில் அழகருக்குரிய பெயர் கல்வெட்டிலே இளங்குமரன்தான் விண்ணகர் என்று இருக்கிறது. ஆழ்வார் பாடலிலே கிருஷ்ணனுடைய பெயர் இளங்குமரன் என்றிருக்கிறது.

தாய் தந்தையருக்கு இவர் எட்டாவது பிள்ளை. அதனால் அவர்கள் சூட்டியது கிருஷ்ணன். இப்பெயரை இளங்குமரன் எனத் தனித்தமிழில் சூட்டிக் கொண்டார்.

**பெற்றோர் :**

தந்தை - படிக்கராமு, தாய்- வாழ வந்தாள்

**ஊர் :**

வாழ வந்தாள் புரம்

**வழிபடும் தெய்வம் :**

வாழ வந்தாள் அம்மை

**கற்ற கல்வி :**

ஆசிரியர் பயிற்சி, வித்துவான் 2டி படிப்பு, 1949 நுழைவுத் தேர்வு, 50இல் இடைநிலைத் தேர்வு, 1951இல் நிறைவு நிலைத் தேர்வு மூன்றிலும் முதல் நிலையில் வெற்றி.

**பணி :**

தன் அண்ணன் பெயரில் (வாழவந்தாள் புரம்) பள்ளி ஒன்றை வாங்கி அதில் தொடக்கக் கல்வி ஆசிரியப் பணி, தளவாய்புரம் 6 ஆண்டுகள் ஆசிரியப் பணி.

**எழுத்துப்பணி :**

*முதலில் எழுதியது திருக்குறள் உரை. 12 முதல் 13 வயதிற்குள் திருக்குறள் 1330மும் மனனம். குண்டலகேசி மதுரை ஆயிரங்கால் மண்டத்தில் அரங்கேற்றம். இவரின் ஆசிரியர் திரு. சதாசிவம் இருவருமாக இணைந்து 1962, 63, 64 ஆகிய ஆண்டுகளில் திருக்குறள்.*

*கட்டுரைகள் 10: திருக்குறள் கதைகள் 10, புறநானூற்றுக் கதைகள் 10, காப்பியக் கதைகள் 10, பொதுக் கதைகள் 10, நாடகங்கள் 10, வரலாறு, ஆக 64 நூல்கள். காக்கை பாடினியார் எழுதிய காக்கைப் பாடினியம் சிறுகாக்கைப் பாடினியார் எழுதிய சிறுகாக்கைப்பாடினியம் (இது அழிந்ததாகக் கருதப்பட்ட நூல்) கண்டு உரையுடன் அச்சிட்டு வெளியிட்ட பெருமை.*

**சாதனைக்குக் கிடைத்த விருதுகள்:**

***ஆயிரம் பிறை கண்ட அறிஞர், பாவாணரின் முதல் வரிசை மாணவர், தனித்தமிழ் இயக்கத்தின் தூண், பன்னூல் ஆசிரியர்.*** *பாரதிதாசன் பல்கலைக்கழகம் வழங்கிய* ***முதுமுனைவர், தூய தமிழ்த் தொண்டர்.*** *சான்றோர் பேராயம் வழங்கிய* ***சான்றோர் விருது,*** *தமிழரசு வழங்கிய* ***திரு.வி.க. விருது, நல்லாசிரியர் விருது,*** *அமெரிக்காவில் உள்ள ஃபெட்னா அதாவது ஃபெடரேசன் ஆப் தமிழ்ச்சங்கம் ஆப் நார்த் அமெரிக்கா 42 தமிழ்ச் சங்கங்கள் கூடி* ***வாழ்நாள் சாதனையாளர் விருது****. அந்நாட்டிலே பத்து ஆண்டுகள் அதாவது ஆண்டுக்கு ஆறு மாதங்கள் வரை தாங்குவதற்கான சிறப்பினைப் பெற்ற ஒரே தமிழர்.*

*மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வழங்கிய* ***தமிழ்ப் பேரவைச் செம்மல் விருது, செந்தமிழ் அந்தணர்.*** *இன்ன பிற...*

# கூடுதுறை

**ஊ**ரில் இருந்து போய குடும்பத்தினர், ஊருக்கு வந்து மணம் புரிந்து கூடுதுறையாக மலையகம் சென்ற புனைவு இது. (ஊர் - தமிழகம்)

நட்பே காதலாதல், பிள்ளைகளும் பெற்றோரும் இசைந்து உற்றார் உறவு மகிழ மணம் புரிதல். மணம் புரிதல் வகையால் முதிய பெற்றோரைப் பிரிந்து துயராக்குதல் இல்லாத, பண்பாடு பேணல், மணங்கொண்ட குடும்பங்கள் கூடுதுறையாக விளங்கி வீடும், நாடும் மகிழ வாழ்தல், முதியரைக் காத்தல் என்பவற்றைக் கருவாகக் கொண்ட புனைவு இது. குடியால் குடிகெடல், ஆழ்சிந்தனை அமைவு, ஊர்நலம் ஊரவர் பேணல், தொழிலாளரைத் தொழில் முனைஞர் மதித்துப் பேணலும் போற்றலும் இன்னவும் இணைந்தது இப்புனைவு.

பூவானி என்னும் பவானி ஆறும், காவிரியாறும் கூடும், கூடுதுறையுண்டு. அவ்வாறு, தமிழகமும் மலையகமும் இணைந்து தமிழ் மொழி இன வளமாவது இப்புனைகதை.

புதுவெள்ளம் பூரிப்பது இப்புனை கதையும் புதுவெள்ளமாகப் பொலிவது.

தூய தமிழ், பண்பாடு, நாகரிகம் இனப்பற்றுமையுடைய கொள்கை **வெற்றிமொழி வெளியீட்டகம்** வெளியிடுவதும், தனிப்பெருமையாம் கூடுதுறையாம். இதனைப் பயில்வார், தமிழ் நலம் பெறுவார். இனப்பற்றுமை கொள்வார்; பண்பாட்டு நயம் பெறுவார்; வாழ்வியல் வளம் கொழிப்பார் என்று உண்மை விளம்புகிறேன்.

இதன் பதிப்பாசிரியப் பொறுப்பேற்று அரிய பதிப்புரையும் எழுதிய பெருந்தகைத் தோன்றல் **அருளாளர்க்கு** நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்.**

# பதிப்பாசிரியம்

செம்மொழிச் சீர்பரவுவார் முதுமுனைவர் மாண்பமை புலவர். இரா. இளங்குமரனார் தம் எழுத்து விரலால் தூவல்கொண்டு எழுதி முடித்த புனைகதைதான் "கூடுதுறை" என்னும் பெயரிய நூலாகும். "கூடுதுறை" என்பதற்கு விளக்கம் வேண்டுமே? ஈராறுகள் கூடும் இடம் கூடுதுறை. இது மக்கள் நாவில் மலர்ந்த சொல். புனைகதையில் பூத்த "கூடுதுறை" எதனை எடுத்துச் சொல்லும்?

"ஊரில் இருந்து போய குடும்பத்தினர் ஊருக்குவந்து மணம் புரிந்து கூடுதுறையாக மலையகம் சென்ற புனைவே இது" என்பது பொருளாம். மணமகன் திருமலை குடும்பத்தாரும் மணமகள் தென்னரசி குடும்பத்தாரும் தமிழ்ப்பண்பாட்டோடு ஒன்று கூடியதைக் "கூடுதுறை"யெனக் கதைக்களமாகக் கொள்ளலாம்.

"கூடுதுறையில்" வரும் கதைமாந்தர்களான திருமலை, தென்னரசி, பச்சை, மாரியப்பர், மங்கை இன்ன பிறரும் தமிழ் நெறியினர்; வாழ்வினர் ஆவர். இவர்களின் ஆளுமைகளை ஐயா அவர்கள் அழகுபட அறிமுகப்படுத்தும் பாங்கும் நம்மை வியக்கவும் - நயக்கவும் செய்விக்கிறது.

தூய தமிழ்ச் சொற்களான, அக்கை, வாடகி, மகிழ்வுந்து, முன்வாரம் போன்றனவும் பிறவும் கதையோடு உறவாடிச் செல்லுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் (35) நாம் அறிந்து கொள்ளவேண்டிய அடையாண் கிளவிகளாக ஆட்சி செய்கின்றன.

"வடவேங்கடம் - தென்குமரி" என்ற தொல்காப்பியத் தொடருக்கு மணமகன் திருமலையையும் - மணமகள் தென்னரசியையும் ஒப்புமைப்படுத்திக் காட்டியுள்ள உயர் திறம் உணர்ந்து போற்றுதற்குரியது. கதையினுள் "சுற்றுலா" தலைப்பிட்ட உட்பிரிவினுள் உள்ள தமிழ்ப்பெயர்களை ஒவ்வொரு பெற்றோரும் தம் குழந்தைகளுக்குப் பெயரிட்டு அழைத்தால் குடும்பம் தோறும் தமிழ் மணக்கும் - இனிக்கும் என்பதை இக்கதையினை ஊன்றிப்படிப்பவர்கள் உணரக்கூடும். வெறும் புனைகதையாக

மட்டுமில்லாமல் ஊர்ப்பெயராய்வும் கதையோடு ஒன்றி ஊடுபாவாகத் திகழ்கிறது. உறையூர் -தூத்துக்குடி- நெல்வேலி போன்றவற்றின் வேரும் -விரிவும் விளக்கமென ஒளி கூட்டுவதைக் "கூடுதுறை" யில் காணலாம். துவரங்குறிச்சி - துவரம்- பயறு - சிவப்பு நிறம் - இந்த மலை -மண் - பகுதி சிவப்பாக அமைந்துள்ளதால் பெற்ற பெயர் என விரிக்கும் போது ஊர்ப்பெயராய்வாளர்களுக்கு இது ஒரு பெரிய கொடையென இடஞ்சுட்டலாம் மலையகத் தமிழுக்கும் -தென்னகத்துத் தமிழுக்கும் உள்ள வேறுபாடு ஒவ்வொரு தமிழனையும் சிந்திக்கவைக்கும்.

**"உரிச்சொல் -விளக்கம்"**
**"திருக்குறள் நெறிகள்"**
**"20 -உட்பிரிவுகள்"**

அத்தனையும் தமிழின் ஆற்றலை அரியணையில் உட்காரவைக்கிறது.

இந்தப் புனைகதைக்குரிய மூலஊற்றாக "நட்பே காதலாதல்" "பிள்ளைகளும் பெற்றோரும் இசைந்து உற்றார் உறவு மகிழ மணம் புரிதல்" மணம் புரிதல் வகையால் முதிய பெற்றோரைப் பிரிந்து துயராக்குதல் இல்லாத பண்பாடு பேணல், மணங்கொண்ட குடும்பங்கள் கூடுதுறையாக விளங்கி வீடும் நாடும் மகிழ்வாதல், முதியரைக் காத்தல் என்பவற்றைக் கருவாகக் கொண்ட புனைவு இது. இத்தகைய அருமையான புனைகதையைத் திண்டுக்கல் வெற்றிமொழி வெளியீட்டகத்தின் நிறுவனர் இரா. தமிழ்தாசன் எதிரேற்று வெளியீடுசெய்திருப்பது வெளியீட்டகத்திற்கும் பெருமை. கணினித்தட்டச்சு செய்த இதயன் அம்மாவிற்கும் பெருமை.

தூய தமிழ், பண்பாடு, நாகரிகம், இனப்பற்றுமை உடைய இந்த நூலைப்பயில்வார்

**"தமிழ் நலம் பெறுவார்"**
**"இனப்பற்றும் கொள்வார்"**
**"பண்பாட்டு நயம் பெறுவார்"**
**"வாழ்வில் வளம் கொழிப்பார்"**

என்பது உண்மை. உண்மை

**இரா. இளங்குமரன்**

புது வெள்ளம் பூரிப்பது

"**கூடுதுறை**" கதையும்

புதுவெள்ளமாகப் பொலிவது

என்பது மறுக்கப்படாத உண்மையிலும் உண்மை.

- பதிப்பாசிரியன்
பெரியகுளம் புலவர். **து. இராசகோபால்**
(அருளாளன்)
திண்டுக்கல்
பேசி: *6380642773*

# உள்ளுறை


1. நம் விருந்தாளிகள் – 10

2. ஆக்கியதைப் படைக்கவுமா அலுப்பு! – 12

3. அந்தக் கோப்பைப் பார்க்கலாமா? – 14

4. உறவைப் பெருக்கியது – 16

5. அரும்பாவூர் உடன்பிறப்பு – 19

6. பேசாதவர் பேசினால் – 22

7. வேலை மனத்தில் – 25

8. அம்மா ஆக்கிய அடுப்பு – 28

9. நாளையே புறப்படுகிறோம் – 31

10. சுற்றுலா – 33

11. தென்குமரி – 36

12. மன்னார் பேசினார் – 40

13. நல்லதுதானே! – 43

14. பதிவும் வரவேற்பும் – 45

15. மாசிலா மாண்பு – 49

16, கூடுதுறை – 51

17. நான் சொல்லியிருக்கக் கூடாது – 54

18. ஒரு திங்கள் ஊதியக் கொடை – 58

19. குடி – புகை – யற்ற இல்லம் – 60

20. நகையே அழுகை – 63

# நம் விருந்தாளிகள் 1

**ப**ழனியப்பர் வீட்டின்முன் வாடகி ஒன்று வந்து நின்றது. முன்வீட்டுப் பெரியவர் "என்ன பழனி வெளியூர்ச் செலவா?" என்றார்.

"நேற்றே உங்களிடம் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். வெளியூருக்குப் போனதாக அறிந்தேன். இன்றைக்கு வானூர்தியில் மகன் **திருமலை**, மலேசியாவில் இருந்து வருகிறான். அதனால் அழைத்து வரப் போகிறோம்".

"திருமலை வந்தும் நெடுநாள் ஆயிற்றே"

"ஆம். வேலை மிகுதி. விடுமுறை வாய்க்கவில்லை. இப்பொழுதுதான் நேரில் பேசுவதோடு, ஆளையும் நேரில் பார்த்துப் பேசமுடிகிறதே!"

**பச்சம்மாளும்** வண்டிக்கு வந்துவிட்டார். மேலூரில் இருந்து திருவரங்கம் வந்து புதுக்கோட்டைச் சாலை வழி வண்டி வானூர்தி நிலையம் சென்றது.

வானூர்தியில் இருந்து வருவோரை வரவேற்க எதிர்பார்த்து நிற்கும் கூட்டத்திடையே பழனியும் பச்சையும் நின்றனர்.

திருமலை, எட்டத்தில் வரும்போதே தன் பெற்றோர் நிற்பதைக் கண்டுவிட்டான். இரு தோள்களிலும் கைகளிலும் சுமை என்றாலும் கையைத் தூக்கியசைத்தான். அவனை ஒட்டி வந்த மூவர்க்கும் தன் பெற்றோர் நிற்பதைக் கூறினான். அடுத்து வந்ததும் வணங்கினான். உடன் வந்த மூவரும் வணங்கினர். அவர்களிடம் 'என் பெற்றோர்' என்ற திருமலை, "**இவர்கள் மூவரும் நம் விருந்தாளிகள்**" என்றான்.

அவனிடம் இருந்த சுமைகளில் ஒவ்வொன்றையும் பழனியும் பச்சையும் வாங்கிக் கொண்டனர். வாடகி, நின்ற இடத்தில் இருந்து அவர்கள் நிற்கும் இடத்திற்கு வந்தது.

"இவர்கள் நேரே நம் வீட்டுக்கு வருகிறார்களா?" என்றார் பழனி.

"ஆம்" என்றான் திருமலை.

வாடகியாரை, இன்னொரு வண்டி அழைக்கச் சொன்னான் திருமலை.

பெற்றோருடன் திருமலை வண்டியில் ஏறிக் கொண்டான். அவர்கள் மூவரும் ஏறிய வண்டி பின்தொடர, முன் போனது திருமலை ஏறிய வண்டி.

"அவர்கள்.." என்று வினவும் நோக்கில் திருமலையை நோக்கினார் பச்சை.

"அம்மா, மூன்று தலைமுறைகளுக்கு முன்னே மலையகத் தோட்ட வேலைக்குச் சென்றவர் **மன்னார்.** அவர் **புலிவலத்துக்காரர்.** பின்னர் அங்கேயே தோட்டவேலை செய்து, குடியுரிமை பெற்று வீடும் வாயிலுமாக உள்ளார். நான்தான் அவர்களை நம் விருந்தாளியாக அழைத்துக் கொண்டுவந்தேன். "

"புலிவலத்தில் உறவினர் உள்ளனரா?"

"இப்பொழுது யாரையும் தெரியாது. யாரோடும் தொடர்பு இல்லை" என்றான். "வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொள்ளலாம்" என்றார் பழனி. பச்சை உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

# ஆக்கியதைப் படைக்கவுமா அலுப்பு 2

மூன்வீட்டுப் பெரியவர் பெருமாள், 'போனது ஒரு வண்டி. வந்தது இரண்டு வண்டி' என்ற திகைப்பில் பின்வண்டியை நோக்கினார்.

திருமலை, "ஐயா பெருமாளை வணங்கி, இவர்கள் மலையகத்தில் வாழ்பவர்கள்; நம் விருந்தினர்களாக அழைத்து வந்தேன். இவர்கள் பரம்பரையூர் புலிவலம்" என்றான். மூவரும் அவரை வணங்கினர். வாழ்த்தினார். வண்டிகளை விடுத்து விட்டு வீட்டுள் சென்றனர். பச்சையம்மாள் இளம்பெண்ணின் கழுத்தில் '**தாலி உள்ளதா**' எனக் கூர்ந்து பார்த்தாள். இன்னும் திருமணம் ஆகாதவள் என்பதை நினைத்து அமைதியுற்றாள்.

திருமலை தம் பெற்றோர்களிடம், "அம்மா பெயர் **மங்கை** ; ஐயா, மன்னார். இவர்கள் மகள், இவள்: **தென்னரசி.** அங்குள்ள தமிழ்ப்பள்ளியில் ஆசிரியர் வேலை பார்க்கிறார். தோட்ட வீட்டில் பெற்றோர்களோடு இருந்துகொண்டு வேலைக்கு வருகிறார். அவர் பள்ளிக்கூடம் எங்கள் மரத்தொழிற்சாலையின் பக்கத்தில் உள்ளது."

"அவர்கள் மாடிக்குச் சென்று நீராடிவிட்டு உணவுக்கு வரட்டும்" என்றார் பழனி.

திருமலை, மூவரையும் மாடிக்கு அழைத்துச் சென்றான்.

மேலூரும் நகரவாடை உள்ள இடம். ஆதலால், சிற்றூர் போல் ஓடிவந்து பார்க்கவோ அவரவர் கருத்துப்போல் பேசவோ வாய்ப்பு இல்லை. பக்கத்து வீட்டார்களுக்கு மட்டும், மன்னார் குடும்பம், திருமலை உறவுக்குடும்பமாக இருக்கும் என்ற எண்ணம் வந்தது.

மாலையில் ஐயா பெருமாள், பழனி வீட்டுக்கு வந்தார். முன்னே இருந்த அறையில் இருவரும் அமர்ந்தனர். திருமலை, திருமணம் பற்றி அங்கிருந்து ஏதாவது பேசினானா என்றார்.

"அப்படி இதுவரை ஒன்றும் அவன் சொல்லவில்லை. அவன் போன நாள் முதல், இதுவரை குடும்பப்பாசம் குறையாத நிலையிலேயே உள்ளான். மாதம் தோறும் செலவு போக வீட்டுக்குப் பணம் விடுப்பதில் குறையவில்லை. மாடி எடுத்ததும், வீட்டுப் பாட்டளவுக்குப் போதுமான அளவு வயல் நிலம் வாங்கியதும் அவன் பணத்தால்தானே ; தச்சுத்தொழில் அவன் பயிலச் செலவிடக் கடன் உடன் தானே வாங்கினேன். அதையெல்லாம் வேலைக்குப் போய் முதல் ஆண்டுத் தொகையிலேயே அடைத்து, எக்கடனும் இல்லாமல் கைக்காசு உடையவன் ஆகிவிட்டது உங்களுக்குத் தெரியாதா? உற்ற போதெல்லாம் பெற்ற பிள்ளைக்கு உதவுவது போல உதவிய உங்களிடம் கலந்து பேசாமல் நான் எதுவும் செய்ததில்லையே!" என்று பேசும்போது, '**வெயிலுக்கு ஏற்ற மோர்**' எனப் பச்சை இரு குவளைகளில் கொண்டு வந்தார்.

மாடியில் இருந்து திருமலையுடன் விருந்தினர் மூவரும் இறங்கினர். "பிறகு பேசலாம்" என்று சென்றார் பெருமாள்.

பச்சை அவர்களை உண்ணுவதற்கு அழைத்துச் சென்றார். இருவரும் திருமலையும் அமர்ந்தனர். தென்னரசி, பச்சையுடன் சமைத்த பொருள்களை எடுக்கவும், தட்டம் போடவும், படைக்கவும் துணையானாள்.

"நீ விருந்தாளி. இவர்களோடு உட்கார்ந்து சாப்பிடு" என்றார். "இல்லை, அப்பா நீங்கள் அமர்ந்து சாப்பிட்ட பின் நான் சாப்பிடுகிறேன். ஆக்கிவைத்ததைப் படைக்கவுமா அலுப்பு" என்றாள் தென்னரசி.

## அந்தக் கோப்பைப் பார்க்கலாமா? 3

"**நீ** உட்கார். நாமே நமக்கு வேண்டியதை எடுத்துப் போட்டுக்கொண்டு உண்ணலாம்" என்றார் பச்சை.

"முன்பு தமிழ்நாட்டுக்கு வந்தது உண்டா " என்றார் பழனி.

"இல்லை. எல்லாரும் சொல்வார்கள் '**ஊரில் இருந்து வந்திருக்கிறார்கள்**' என்று. எனக்குப் புரியாமல் 'எந்த ஊர்' என்பேன். நமக்கு ஊர் '**தமிழ்நாடு**' என்பார். அப்படிக் கேள்விப்பட்டதுதான். எங்கள் மூன்று தலைமுறைக்கு முன் ஒருவர் இளமையிலேயே அங்கே வருவாரோடு வந்துவிட்டார். அவர்தாம் எங்கள் ஊர் '**புலிவலம்**'என்று சொன்னாராம். எந்த உறவினரும் அப்பாவுக்குத் தெரியாதாம்!"

"நீ எப்படித் திருமலையை அறிந்தாய்?"

"**அது பெரிய வேடிக்கை!** நான் வேலை பார்த்தது **தமிழ்ப்பள்ளி.** அவர் வேலை பார்த்தது **தச்சுத் தொழிலகம்.** ஆனால் ஒருவரை ஒருவர் பார்த்தது இல்லை. ஒருநாள் விடுமுறையில், எங்கள் பால்தோட்ட வீட்டில் இருந்தேன். அவர் அவரோடு வேலை செய்பவர்களுடன் தோட்டத் தொழிலகப் பகுதியைச் சுற்றுலாப் போலப் பார்க்க வந்தார். நான் வீட்டுள் என் ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் வரைந்த கோட்டுப்படம், வண்ணப்படம் ஆகியவை இருந்த கோப்பினைத் தூசி தட்டித் தூய்மைப்படுத்த வீட்டு வாயில் பக்கம் வர, அவர் அப்பாவொடு பேசிக்கொண்டிருப்பது கண்டேன்.

அவர் என்னைப் பார்த்தார். '**என் மகள்; ஆசிரியர்;** உங்கள் தொழிற்சாலைப் பக்கத்தில் அவர் பள்ளி' என்றார் அப்பா. நான்

அவரை வணங்கினேன். அவர் என்னை வணங்கி, '**அந்தக் கோப்பை நான் பார்க்கலாமா?**' என்றார்.

"இது பயிற்சிப் பள்ளியில் **கிறுக்கிய ஓவியம்**" என்றேன். கையை நீட்டி அவரிடம் கோப்பைத் தந்தேன்.

அக்கோப்பைப் பார்த்த அவர்,

"நீங்கள் ஓவிய ஆசிரியரா?" என்றார்.

"இல்லை, பொது ஆசிரியர்தான்" என்றேன்.

"ஓவியங்கள் அருமையாக உள்ளன. ஓவியம் மென்மைக் கலை. அதிலும் பெண்மைக்கலை. இந்த விரல் நளினம் ஆண்களுக்கு வராது. வந்தால், அந்த ஆண் மெல்லியல் பண்பு வாய்ந்தவராக இருப்பார். நான் என் பூ வேலைப்பாடு, மாலை வேலைப்பாடு, கோபுர வேலைப்பாடு, ஆண் பெண் உருவ வேலைப்பாடு என்பவற்றுக்கு எத்தனை எத்தனை இடங்களுக்கோ அலைந்து ஓவியர்களைக் கண்டு வீணடித்திருக்கிறேன். "**கையருகே தங்கப்புதையல்** இருந்ததை அறியேன் " என்று தம் தலையில் அடித்துக் கொண்டார்!

என்னைப் பார்த்து, "**நீங்கள் அப்பாவை அழைத்துக் கொண்டு என் தொழிற்சாலைக்கு வரமுடியுமா?**" என்று என்னையும் அப்பாவையும் பார்த்தார்.

"வாய்த்த பொழுதில் அப்பாவொடு வருகிறேன்." என்றேன். **இதுதான் நாங்கள் அறிமுகமான நிகழ்ச்சி.** அப்பொழுதுதான் அரும்பாவூர், புலிவலம், துறையூர்ப் பகுதிகளில், கல் தச்சு, மரத்தச்சு மிகுதி என்றார். புலிவலம் என்றதும் அப்பாவுக்குத் தம் முன்னோர் பிறந்த **பொன்னான மண்ணைக் கண்ணாலாவது பார்த்துவிட வேண்டும்** என்று ஆர்வம் ஏற்பட்டது.

"சரி, தச்சுக்கூடம் போனீர்களா?"

"உங்கள் மகனார் சமையல் வேலை செய்துகொண்டு வேர்த்து விறுவிறுக்க அடுப்பும் துடுப்புமாக இருந்த வேடிக்கைக் கோலத்தைப் பார்த்துவிட்டு, ஓடோடிப்போய் அப்பாவோடு இருங்கள். நான் சமைத்துவிட்டு வருகிறேன் என்று வெளியே தள்ளினேன்." அவளும் சிரித்தாள். அவர்களும் சிரித்தனர்.

# உறவைப் பெருக்கியது 4

"இப்படிச் சிரித்துப் பேசி அவர்கள் ஒருநாளும் உண்டது இல்லை" என்றார் பழனி.

"ஓவியம் என்ன ஆனது?" என்றார் பச்சை.

"ஒட்டியிருந்த தச்சுக்கூடம் சென்றால் வளமாக, **இருக்கைகள், கட்டில்கள், ஒப்பனைக் கண்ணாடி மேடை, நிலைப் பேழைகள், மரத்தாலேயே ஆறடி முதல் பதினாறடி உயரமான வழிபாட்டுக் கூடகோபுரங்கள்**- பார்த்துப் பார்த்து அயர்ந்து போனேன்."

"நான் என்ன செய்ய வேண்டும்" என்றேன்.

"நீங்கள் இவற்றை இன்னும் எத்தகைய வனப்பாகச் செய்யலாம் என எங்களுக்கு வரைந்து தர வேண்டும். அது உங்களால் முடியும்" என்றார். அங்குள்ள பொருள்களின் படங்கள் அச்சிட்ட **விளம்பரக் கோப்பை** என்னிடம் தந்து, உங்கள் வாய்ப்புப்போல் செய்யுங்கள். உங்கள் தொழிலுக்கு இடையூறு இல்லாமல், இதை ஒரு கலைத்தொண்டாகச் செய்தால் பேருதவியாக இருக்கும் என்றார்.

"எனக்கு அவ்வரைகலையைச் செய்யுமுன், இவர்க்குச் சமையல் வேலையில் இருந்து விடுதலை தரவேண்டும்" என்ற எண்ணம் முந்து நின்றது. வரும்போது அப்பாவொடு பேசினேன்.

இது ஒரு வேளைப்பாடு இல்லை ;

ஒரு நாளைப் பாடும் இல்லை.

‘ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்

இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒருநாளும்

என்நோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே

உன்னோடு வாழ்தல் அரிது.’ என்னும் பாடல் சொல்வதுபோல் **தீராப்பாடு**. இதற்குத் தீர்வு காணல் முதல் **வேலை** என்றேன்.

“நம் தோட்ட வேலை செய்ய முடியாத முதியவர் சிலர் உளர். அவர்களுள் யாரையாவது நாம் பார்த்து விடுக்கலாம்” என்றார். அவ்வாறே ஒருவரை விடுத்தோம்.

அச்செயல் இவர்க்கும், அவர்க்கும் நலமாயிற்று. எங்கள் உறவையும் பெருக்கியது” என்றாள்.

“ஏதாவது உதவி செய்தாயா?”

“அவர் தந்த கோப்புகளில் உள்ள படங்களை மிக நுணுக்கமாக நோக்கி, இவ்விவற்றை இவ்வாறு ஆக்கினால் மேலும் சிறப்பாக இருக்கும். புதிய தோற்றம் தந்து வணிகப் பெருக்கத்துக்கும் துணையாம் என்று யான் வரைந்த வரைபடங்களைச் சில நாள்களின் பின் தந்தேன்.

நானும் அவரும் அதைப் பார்த்துப் பேசிக்கொண்டு இருக்கும்போது, தொழிலகத்திற்குமுன் ஒரு மகிழ்வுந்து வந்து நின்றது. அதில் இருந்து இருவர் இறங்கி வந்தனர். அவர் வாயிலுக்குச் சென்று வணக்கமிட்டு, “நீங்கள் இப்பொழுது வந்தது மிக நலமாயிற்று” என்று கூறி அழைத்து வந்து என்னிடம், இவர்கள்தாம் இந்தத் தொழிலக உரிமையாளர். இவர்கள் இருவரும் ஊரில் இருந்து வந்தவர்களே. இவர் ஐயா **மாரியப்பர்;** இவர் அம்மா **வெற்றி** என்று சொன்னவர், இவர் பெயர் **தென்னரசி**; இவர் பக்கத்துள்ள தமிழ்ப்பள்ளி ஆசிரியர். நல்ல ஓவியத் திறம் வாய்ந்தவர். பால்மரக் காட்டில் பெற்றோருடன் உள்ளார்” என்று கூறியவர், இவர் குடியிருப்புப் பக்கம் சென்றது முதலியனவும் கூறி, யான் வரைந்த வரைவுகளைத் தந்தார். என்னை அவர்கள் அமரச் சொல்லிப் பக்கம் பக்கமாகப் பார்த்தனர். “அருமை, அருமை என்று கூறி வரைவாரைத் தேடித்தேடிச் சலித்தோம்” என்று

மாரியப்பர் கூற, அம்மையார் என் கையைப் பற்றிக் குலுக்கிப் பாராட்டினார்.

அவருக்குக் **கோலாலம்பூர், கிள்ளான், பினாங்கு** முதலிய பெருநகரங்களில் விற்பனை வளாகங்கள் உள்ளன. அதனால் இப்புதுவகை வரவு வணிகம் பெருக்கமாக, **ஒரு விழா எடுத்து என்னைப் பாராட்டியதுடன் பொற்கிழியும் வழங்கினர்.** என்னை அறிமுகப்படுத்திய திருமலையையும் சிறப்பித்துப் பாராட்டினர்.

என் பெயர் 'தென்னரசி' என்பதை வியந்தார். "என் தம்பி மகள் தென்னரசி ; **இவரும் என் மகள் தென்னரசி**" என்று பாராட்டிய **மாரியப்பர் உரை என் வாழ்வில் கிடைத்தற்கு அரிய பேறாகும்**" என்றாள்.

உட்கார்ந்தோமா, எழுந்தோமா என்று உண்டு முடிக்கும் பழனியபபர் பொழுது போவது தெரியாமல் உரையாடிக்கொண்டே உண்டார்.

அவரைப் பார்க்க வநத ஐயா பெருமாளும் உரையாடலுக்குத் தடை வேண்டா என்று "பிறகு வருகிறேன்" என்று சென்றுவிட்டார்.

தென்னரசி, அப்பா அம்மா திருமலை இருக்கும் மாடிக்குச் சென்றாள்.

பழனியப்பர், முன்வீட்டுப் பெருமாள் ஐயாவைப் பார்க்கச் சென்றார்.

தென்னரசி மாடிக்குப் போனவள் கீழே இறங்கி, சமையல் அறையில் இருந்த பச்சையம்மாள் பக்கம் சென்று, "எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்" என்றாள்.

"நீ விருந்தாளி; மேலே ஓய்வாக இரு" என்றார் பச்சை.

"விருந்தாளி வீட்டாளி **எல்லார்க்கும் பொது உணவு;** உங்கள் பிள்ளை உதவிக்கு வந்தால் வேண்டாம் என்பீர்களா?" என்றாள் தென்னரசி. "சமைக்க நேரமாகும் ; நாம் மேலே போவோம்" என்று மேலே போயினர்.

# அரும்பாவூர் உடன்பிறப்பு 5

பெருமாள் ஓய்வாகச் சாய்ந்திருந்தார். பழனியைக் கண்டதும் எழுந்து வந்து முன்வாரத்தில் அமர்ந்தனர். "நான் வந்தேன்; உரையாடிக் கொண்டே உணவு கொண்டீர்கள். பிறகு வரலாம் என வந்தேன்" என்றார்.

"நீங்கள் வந்ததை அறிந்தே வந்தேன்" என்றார்.

"நம்மூர்ப் பிள்ளைகள் பேசுவதைப் பார்க்கிலும் அழகாகவும் நயமாகவும் பேசுகிறாள் தென்னரசி. பெயரும்தான் பாருங்கள், **மன்னார், மங்கை, தென்னரசி!**

**தமிழர் வெளிநாட்டுக்குப் போய் அந்நாட்டார் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று அறிந்து தாமும் பின்பற்றுகிறார்கள்.** மன்னார்க்கு ஒரே மகள் தென்னரசி என நினைக்கிறேன்."

"சரிதான்! அவள் ஒரே பிள்ளைதான் " என்று கூறிய பழனி, தென்னரசி சொல்லிய செய்திகளையெல்லாம் கூறினார்.

"நீங்கள் திருமலை திருமணம் பற்றி ஏதாவது எண்ணியிருக்கிறீர்களா?"

"எண்ணினேன்; ஒன்றிரண்டு இடங்களும் பார்த்தேன்."

"பழனி ஒன்று சொல்கிறேன். நாம் பழகிய குடும்பம் பண்பான குடும்பம் என்று மட்டும் பாராமல், பையனுக்கும் பெண்ணுக்கும் விருப்பம் உள்ளதா என்பதைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும்."

“நாம் இருப்பது திருவரங்கம் மேலூரில். அவர்கள் இருப்பதோ அயல்நாட்டில்! ஆதலால், நம் விருப்பத்தை மட்டும் முன்வைக்காமல் அவர்கள் விருப்பத்தையே முன்வைத்துப் பெண், மாப்பிள்ளைகளை முடிவு செய்ய வேண்டும்.”

“நீங்கள் சொல்வது சரிதான். வாழப் போகின்றவர்கள் அவர்கள்தாமே!”

“அவர்கள் பேச்சு, கருத்து வெளிப்பாடாகத் தெரியவில்லை! பச்சைக்கும் எனக்கும் விருப்பம் தான்! திருமலைக்கு விருப்பில்லையானால் வீட்டுக்கு நேரே அழைத்துக் கொண்டு வந்திருக்க மாட்டான். அவர்களும் வானூர்தி நிலையத்தில் இருந்து வந்து, திருச்சியில் ஒரு விடுதி போட்டுத் தங்கியிருப்பர்.

நாம் பகலுணவை நம் வீட்டில் ஒன்றாகச் சாப்பிடுவோம். குறிப்பாகச் செய்தி அறிவோம். நாளைக்குத் திருவரங்கத்தில் இருந்து தென்னகப் பகுதியைச் சுற்றிப் பார்க்கக் கிளம்புகின்றனர்” என்றார் பழனி.

“நீங்கள்?”

“உடன் வரச் சொல்கிறான் திருமலை. இரண்டு வண்டி நீங்களும் வந்தால் நலமாக இருக்குமே என்பது என் எண்ணம்.”

“நான் பாராத இடம் இல்லையே!”

“அதனால்தான் நல்ல வழிகாட்டியாயிற்றே என்று எண்ணுகிறேன்.”

“எனக்கு என்ன, செய்தித்தாள் பார்க்க, புத்தகம் படிக்க, ஓய்வாக இருக்க! வேறு வேலை என்ன?வேளைக்கு உணவும் குடிப்பும்; போகலாம்” என்றார்.

“எத்தனை நாள் திட்டம்?”

“மூன்று நாள்; முதல் நாள் குற்றாலம் தங்கல். மறுநாள் கன்னியாகுமரி, அடுத்தநாள் இராமேசுவரம்.

மகன் திருவரங்கம் போயுள்ளான். அவனுக்கு ஓயாச் சுற்று வேலை. அவன் வீட்டில் மூன்று நாள் இரவும் இருப்பான் என்றால், அவனிடம் சொல்லிவிட்டுப் புறப்படலாம்.''

''அரும்பாவூர் மகளுக்குத் தம்பி வந்தது தெரியுமா?''

''மகள் மருமகன் மாலையில் இங்கு வருவார்கள். ஏனென்றால் உடன்பிறப்பு இல்லையா!''

# பேசாதவர் பேசினால் 6

திருமலை, பெருமாளையாவை நண்பகல் உணவுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

பச்சையம்மாளும் தென்னரசியும் சமைத்தவற்றை வரிசையாக எடுத்து வைத்தனர்.

ஆண்கள் நால்வரும் முதல் பந்தியாக உண்டனர்.

மங்கை மட்டும் யாரொடும் ஒட்டாமல் தனியே இருந்தார். முதல் பந்தி முடிந்ததும், மங்கையை அழைத்து அமரச் செய்து பச்சையும் தென்னரசியும் அமர்ந்து உண்டனர். மங்கை உண்ணும்போதும் கவலைக் கோடு வெளிப்படவே இருந்தார்.

**அவர் நிலையைப் பெருமாள், நுட்பமாகக் கண்டு கொண்டார்.**

உணவை முடித்து முதல் ஆளாக மங்கை வந்தார்.

ஐயா பெருமாளைப் பார்த்து, ஒரு கும்பிடு போட்டார்.

“நீங்கள் மூவரும் மாடிக்கு வந்தால் உங்களிடம் கலந்து பேச வாய்ப்பாக இருக்கும்” என்றார்.

பெருமாள் நுண்ணிய பார்வை சரியானது என்பது போல் தோன்ற “அம்மா நன்றாகப் பேசலாம். நம் வீடு, நம் உறவு என்று முழு நம்பிக்கையோடு பேசலாம். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்” என்ற தாயுமானவர் கோயில் திருச்சியில் உள்ளது. அதன் நிழலில்

வாழ்பவர்கள் நாங்கள். மேலே போகலாம்'' என்று முன்னே சென்றார். மூவரும் தொடர்ந்தனர்.

''என்னவர் பிறந்த மண்ணைப் பார்க்க வேண்டும் - பார்க்க வேண்டும் என்று ஊரில் இருந்து யார் வந்தாலும் சொல்வார். அது தம்பி திருமலைக்கும் தெரியும். திருமலை விடுமுறை போட்டுவிட்டு ஊருக்குப் போய்த் திரும்பும் திட்டம் தம்மிடம் உள்ளதைச் சொல்ல, அவருடன் வர விருப்பம் பெருகியது. போகிறதே போகிறோம் குடும்பத்தோடு போகலாமே என்று எண்ணம் வர மகள் தென்னரசியும் ஆர்வத்தால் ஏற்க நான் உடனாகி வந்தேன்.''

''எங்களுக்கு இவள் ஒரே மகள். இவள்தான் எங்கள் வாழ்வு, வளம். **இவளைப் பிரியாமல் எங்கள் காலம் அமைய வேண்டும். அதை எண்ணும் பொழுதில் இவளை மணந்ததால் மணப்பவர் குடும்பத்துக்கும் எந்தத் துயரும் ஏற்பட்டுவிடக்கூடாது** என்ற உருக்கமும் உண்டாகிறது.

திருமலை தங்கமான பிள்ளை ; கலை உள்ளமும் அயரா உழைப்பும் பண்பாடும் நிறைந்தவர். அவருக்குத் தக்க கலையுணர்வும் பண்பாடும் மிக்கவள்தான் தென்னரசி; இந்தச் சிக்கல் இந்த வீட்டுள் காலடி வைத்தவுடன் கலக்கத் தொடங்கிவிட்டது.

**திருமண எண்ணத்தோடு நாங்கள் ஊருக்கு வரவில்லை.** ஆனால், ஐயா பழனியார், பச்சையம்மாள், திருமலை ஆகியோர்க்கு மனநிறைவு இருப்பது எனக்கு நிழலாடுகிறது.

இதுவரை திருமலையோ தென்னரசியோ நட்பை அல்லாமல், காதல் உணர்வோடு பழகவில்லை. நீங்கள்தான் நல்வழிகாட்ட வேண்டும்'' என்றார்.

''**பேசாதவர் பேசினால் பேருண்மைகளாக இருக்கும்**'' என்பதைப் பளிச்செனப் பெருமாள் புரிந்து கொண்டார்.

''அம்மா நீங்கள் தோட்டம் வீடு குடியுரிமை வேலை என மலையகத்தில் இருப்பவர்கள்.

இவர்கள் இங்கே தோட்டம் வீடு எனப் பிறந்த மண்ணில் வாழ்பவர்.

திருமலை ஒப்பந்த வேலையாகச் சென்றவர்.

ஒப்பந்த காலம் முடிந்ததும் வர நேரிட்டால், முதுமையில் உடனிருக்க வேண்டிய மகளைப் பிரிந்து அதுவே நோயாளியாக்கிவிடும் என்பது உண்மைதான். அதே பொழுதில் திருமலை அங்கேயே தங்க வாய்த்துத் தம் பெற்றோரைப் பிரிவுத் துயர்க்கு ஆளாக்கிவிடக் கூடாதே என்ற உங்கள் உருக்க உள்ளம் **தெய்வவுள்ளம்**'' என்றார்.

# வேலை மனத்தில் 7

“திருமணம் என்னும் எண்ணம் வரும்போதே இதனை எண்ணுதல் நலம் என்பதால் பொறுத்துக் கொண்டு நல்ல முடிவு எடுங்கள் என வேண்டுகிறேன்” என்றவர் மேலே தொடர்ந்தார் மங்கை.

“இவருக்குப் புலிவலம் என்னும் ஊர்ப்பெயர் கேட்டதை அன்றி உறவு யாரும் இல்லை. மூன்று தலைமுறையாக அங்கே வாழ்வதால் இவர் முனனோர் கொண்ட தோட்ட வேலையர் உறவுதான் உறவு. மணம் எடுப்பு கொடுப்பு அங்கேயே இருந்தது. என் முன்னோரும் இங்கிருந்து வந்தவர்கள்தாம். எனக்கு ஊரும் தெரியாது. என் பெற்றோரும் என் இளமையிலேயே **கொசுக் காய்ச்சலால்** இயற்கை எய்தியதால், என் பாட்டி வளர்ப்பில் வளர்ந்து ஐந்து வரை படித்தேன்.

பின்னர்ச் சில ஆண்டுகளில் பாட்டிக்கு உதவியாகத் தோட்ட வேலைக்குப் போனேன். அவருக்கு முடியவில்லை. எங்கள் வீட்டுப் பக்கத்து வீட்டு அம்மா இவர் தோட்டத்தைப் பற்றியும், இவர் குணம் பற்றியும் கூறினார். அவர், இவர் தோட்டத்தில் வேலை பார்ப்பவர். பாட்டி அவரோடு போய் அவரோடு வர விடுத்தார்.

போன முதல் நாள் இவர், “தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க வந்தாயா?” என்றார்.

“இல்லை ; வேலைக்கு வந்தேன்” என்றேன்.

‘‘இந்த இளமையிலா’’ என்றார்.

‘‘**வேலை, கால் கையில் இல்லை மனத்தில் இருக்கிறது**’’ என்றேன்.

‘‘**நல்ல தெளிவு, நல்ல துணிவு**’’ என்றவர், **தலைச்சியிடம்** ‘‘இவளை நாட்கூலிக் கணக்கில் வேலைக்குப் பதிந்துவிட்டு, வேலைபார்க்கச் சொல். வேலையையும் கற்றுக் கொடு’’ என்றார். தலைச்சியும் என் இளமை கண்டு வியந்தார். பதிவு செய்தார். வேலை தந்தார். என்னை அழைத்துப் போனவர் வழிகாட்டலில் வேலை செய்தேன்.

ஒரு வாரத்தில் எனக்கு வேலை பழக்கமாகிவிட்டது. தலைச்சியே, **வாரக் கூலி**யில் சேர்க்கலாம் என்று சேர்த்துவிட்டார். முதல் நாள் நான் கூலி பெற்றதும், கூலி தந்த தலைச்சியை வணங்கினேன். நேரே இவரைக் கண்டு நான் வாங்கும் முதல் சம்பளம் என்று அவர் கையில் தந்து காலில் விழுந்து வணங்கினேன்.

‘‘**அம்மா, உன்னைப் போன்றவர் உழைப்புக் கொடைதான் இந்தத் தோட்டம், வீடு, உன்னைப் போல் நாட்கூலி வேலை செய்தவர்தாம் என் பாட்டனும் பாட்டியும்**’’ என்றார்.

அவர் மட்டுமே இருந்தார். ‘‘பெண்கள் யாருமே இல்லையா?’’ என்றேன்.

‘‘அம்மாவும் நானும் இருந்தோம். அவர் கடந்த ஆண்டு காலமாகிவிட்டார்’’ என்றார்.

‘‘நான் மேல் எதுவும் பேசாமல் விடை பெற்றுக்கொண்டு வந்து, என்னை அழைத்துக் கொண்டு வந்தவரோடு வீடு சேர்ந்து பாட்டி கையில் பணத்தைத் தந்தேன்.’’

‘‘என் நிலை உன்னை வேலைக்கு அனுப்ப வைத்தது. மேலே படிக்க வைக்க முடியவில்லை. நீ உழைத்து அந்த வருவாயில் வாழ வேண்டிய நிலை ஆயிற்று’’ என்று கூறியவர், நான் தந்த பணத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு என்னை மார்பொடு தழுவி ஒரு குறிப்பேட்டில் நாள் - சம்பளம் - எழுதிக் கொண்டு ஒரு தகரப்

பெட்டியில் கணக்கையும் தொகையையும் போட்டு வைக்கச் சொன்னார்.

அவர் தோட்ட வேலைக்குப் போக முடியவில்லை என்றாலும், இரண்டு வீடுகளில் வேலை பார்த்து வந்தார். அந்தத் தொகையால் சிக்கனமாகவும் சீராகவும் வாழப் பழகிவிட்டதால், என் சம்பளத்தைச் சேமிப்பு ஆக்கினாள்.

தோட்டத்து உரிமையாளர் தாமே சமைத்து உண்பது என் மனத்தை வருத்தியது. என்னை வேலைக்கு அழைத்துப் போன அம்மாவிடம், தோட்டக்காரருக்கு நான் சமைத்துத் தந்துவிட்டு வேலைக்குப் போய்விடலாம் என நினைக்கிறேன் '' என்றேன்.

''தலைச்சி முதல் பலரும் கேட்டனர் சமைத்துத் தருவதாக, அவர் மறுத்துவிட்டார் '' என்றார் அவர். நான் அமைந்தாலும், என் மனம் கேட்கவில்லை. ஒருநாள் வேலை முடித்து அவரைப் போய்ப் பார்த்தேன். ''என்ன? ஏதாவது சொல்ல வேண்டுமா?'' என்றார்.

''ஆம்''

''சொல்''

''நான் வேலைக்கு உரிய பொழுதுக்கு முன்னரே இங்கே வந்து, உங்களுக்கு சோறு குழம்பு ஆக்கி வைத்து விட்டு வேலைக்குப் போய்விடுகிறேன்'' என்றேன்.

திகைப்படைந்தார்.

எதுவும் சொல்லவில்லை.

மனத்துயரோடு உள்ளே போனார். நான் பின்னே போனேன்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

நானும் வெளியே வந்தேன்.

''நாளை ஞாயிறு. வேலை இல்லை. உன் பாட்டியை அழைத்துக் கொண்டு வா'' என்றார்.

# அம்மா ஆக்கிய அடுப்பு 8

மறுநாள் காலையில் முன்னரே எழுந்து நானும் பாட்டியும் உணவைச் செய்து ஒரு தூக்கில் எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போனோம்.

இவர் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தார். என்னையும் பாட்டியையும் கண்டு, வீட்டுக்கு வந்தார். வணங்கினோம்.

"காலையிலேயே வந்துவிட்டீர்களே" என்றவர், தூக்கைக் கண்டு, "**தூக்கில் உணவா?**" என்றார்.

"ஆம்" என்றேன்.

"**நான் புலால் உண்ணாதவன்**" என்றார்.

"**நாங்களும் புலால் உண்ணாதவர்கள்தாம்**" என்றேன்.

"பாட்டிக்குச் செய்தி தெரியுமா?"

"அவரே, நீ சமைத்துத் தந்துவிட்டு வேலை பாரேன் என்று சொன்னபின்தான், நானே கேட்டேன்."

"நான் தனியாள்; சமையலாள் வைத்துக் கொள்ளலாம் என்றனர்; தோட்ட வேலைக்கு வருபவர், நாங்கள் சமைத்துவிட்டு வேலைக்குப் போகிறோம் என்றனர். ஏன் திருமணம் செய்து

கொண்டால் எந்தச் சிக்கலும் இல்லையே என்று பெண் பார்த்தவரும் உண்டு'' என்று கூறியவர் என் பாட்டியைப் பார்த்து,

''இவளுக்கு மணமகன் பார்க்கிறீர்களா? உறவாக யாரும் உண்டா?'' என்றார். மேலும், ''**என் அம்மா ஆக்கிய அடுப்பில் நான் ஆக்க வேண்டும். அல்லது எனக்கு மனைவியாக வந்தவள் ஆக்க வேண்டும்** என்ற உறுதியில் இருப்பவன் நான்.'' என்றார்.

நான் தலைகுனிந்து கொண்டு அப்பால் போய்விட்டேன்.

என் பாட்டியிடம் இவர், ''உங்கள் மங்கையை நான் மனைவியாக ஏற்றுக்கொள்ள இசைவீர்களா? மங்கை என்னை ஏற்றுக் கொள்வாளா?'' என்றார்.

''**ஐயா தெய்வத்தின் குரல்** என்பது இதுதான்! நான் பட்டுக் கொண்டிருக்கும் துயரமெல்லாம் ஒரு நொடியில் ஒழிந்தது'' என்றார் பாட்டி.

''மங்கை முடிவை அறிய வேண்டும்'' என்றார்.

''இவர் சொல் எனக்கு மின்னலாக ஒளி செய்தது. ஓடிப்போய் இவர் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, '**உங்களுக்கு மனைவியாக நான் தக்கவளா?**'' என்றேன்.

''**உனக்கு நான் கணவனாகத் தக்கவனா**'' என்பது என் வினா என்றார்.

''**எனக்கு வாய் வரவில்லை. இவர் கையைப் பிடித்தேன்.** பாட்டி என் தலையை வருடினார். இவர் முன்னால் இருந்த வாழையில் இலை பறித்து வந்தார்.

கொண்டு சென்ற உணவை இவர்க்குப் படைத்தேன். பாட்டியும் நானும் பக்கத்திருந்து உண்டோம். எனக்கு உரிய வயது ஆகியிருந்ததால் பாட்டி, தலைச்சி, தலைச்சன் சான்றாகப் **பதிவுத் திருமணம்** செய்து கொண்டோம்.

எங்கள் திருமணத்தின் பின், பாட்டியும் எங்களோடு வந்துவிட்டார். நான் தோட்ட வேலை செய்தேன். பாட்டி சமையலைப் பார்த்துக் கொண்டார்.

தென்னரசி பிறந்தபின் "வேலைக்குப் போக வேண்டா; பிள்ளையைப் பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டார். இதை ஏன் சொன்னேன் என்றால், **நாங்கள் சாதி சமயம் பார்ப்பது இல்லை. தமிழரா** என்று பார்ப்போம். **மனத்துக்குப் பிடித்தவரா** என்று பார்ப்போம். அங்கேயே குடியுரிமையுள்ளவரா என்று பார்ப்போம். இம்மூன்றில் **மூன்றாவதை முடிவு செய்தால்**, தென்னரசி, திருமலை, அப்பா அம்மா இசைவறிந்து முடிவு செய்யலாம்" என்றார்.

"இங்கே பதிவுத் திருமணச் சான்று பெற்றால், அங்கே குடியுரிமை பெறமுடியுமா" என்றார் பெருமாள்.

"அதற்கெனக் குடியுரிமை வழங்கும் அலுவலகம் உண்டு. அங்கே விண்ணப்பித்து உரிமை பெறலாம்." என்றார் மன்னார்.

"மாலையில் அரும்பாவூரிலிருந்து **மூத்தமகள்** வருகிறாள். அவளிடமும் பச்சையிடமும் கலந்து கொண்டு முடிவு செய்யலாம்" என்றார் பழனி.

"மகன் கூட்டுறவுப் பதிவாளராக இருப்பதால் அவன் வழியாகத் திருமணப் பதிவை நடத்தவும் எளிதாக முடியும்" என்றார் பெருமாள். "நீங்கள் சுற்றுலாவில் உடன் வருவதால் எங்களுக்கு அரிய வழிகாட்டி ஆவீர்கள். மன்னாரிடம் கலந்து உடன் வாருங்கள்" என்றார் பழனி.

மன்னார், "திருமலையும் நாங்களும் புலிவலத்தைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறோம்" என்றார்.

அனைவரும் கீழே வந்தனர். புலிவலத் திட்டத்தை மன்னார் சொல்ல, திருமலை வண்டி ஏற்பாடு செய்தான்.

ஊர்ப்பெயர் கேட்டது தவிர எதுவும், தெரியாத மன்னாரும் குடும்பத்தவரும் புலிவலம் பார்த்துவிட்டு வரும் வழியில் வெள்ளறை என்னும் கோயில் வளாகத்தையும் பார்த்துத் திரும்பினர்.

# நாளையே புறப்படுகிறோம் 9

மங்கையைப் பற்றிய கலக்கம். தென்னரசியையும் பற்றிக் கொண்டது.

"அப்பாவும் நீங்களும் வருவதாகத் தானே முதல் திட்டம். என்னை உடன் வரவேண்டும் என்று வற்புறுத்தியதால்தானே நான் வர அம்மாவும் வர நேர்ந்தது. நான் என் பெற்றோரை எக்காரணம் கொண்டும் பிரியமாட்டேன். நீங்கள் உங்கள் ஒப்பந்தக் காலம் முடிந்ததும் ஊருக்கு வருவதாக இருந்தால், எங்களுக்கு எந்தச் சுற்றுலாவும் வேண்டாம். நாளையே முயன்று கிடைக்கும் ஊர்தியில் புறப்பட்டு விடுகிறோம்." என்று சொன்னாள்.

சிரித்தான் திருமலை.

"சிக்கலைச் சொன்னால் சிரிக்கிறீர்கள்! திருமணம் அழித்துக் கிழித்து விளையாடும் விளையாட்டில்லை!"

"என்னை நம்பவில்லையா?"

"சந்திப்பு - பேசல் - கலை - இவற்றில் நம்புகிறேன். திருமண வாழ்வில் எனக்குத் தெளிவான நம்பிக்கை ஏற்படவில்லை."

"இன்று மாலையில் என் அக்கை வழி உங்களுக்கு ஏற்படும். என் வாழ்வில் அப்பா அம்மாவைக் காட்டிலும் கூட என் அக்காளுக்கு ஆர்வமும் பற்றும் மிகுதி. நான் சொல்ல மாட்டேன். அக்காள் வந்ததும் நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்" என்றான்.

தென்னரசி சிந்தனை முற்றும் தீர்ந்துவிடவில்லை. திருவரங்கத்தையும் திருவானைக்காவையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்தனர்.

அரும்பாவூர் அக்கை, கணவன் மகன் ஆகியவரொடு முற்றத்தில் நின்று வரவேற்றனர். தம்பி, ‘தென்னரசி’தாமே என்று கட்டிப்பிடித்தார். “என் அக்கை **அழகம்மை**” என்றான் திருமலை.

“**இந்தத் தங்கத்தின் முன் நான் பித்தளை.** இதுதான் அழகுக்கு அழகு: காலமெல்லாம் என் தம்பியையும் உங்களையும் பார்க்க வந்து, நாங்கள் விருந்து கொண்டாட வாய்க்கும். நீங்களும் நினைத்த போதெல்லாம் விருந்தாளியாக வந்து போகலாம்.

“வாங்க” என்று வீட்டுள் அழைத்துச் சென்றாள். ‘அத்தைடா இவங்க’ என்று சொல்ல, அவன் ‘வணக்கம்’ என்றான். தென்னரசி மலர்ந்த முகத்தோடு அணைத்துக் கொண்டு ‘இவன் பெயர்’ என்றாள்.

‘முருகன்’ என்றாள் அழகம்மை!

‘நல்ல பெயர்’ என்றாள் தென்னரசி.

அம்மா அடுப்பில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தார்.

அழகம்மை சொன்னாள்: “நாங்கள் அரும்பாவூரில் உள்ளோம். தம்பி மலையகத்தில் தங்குவதால் அப்பா அம்மாவோடு இருந்து இங்குள்ள தோட்டம் தோப்பைப் பார்ப்பது என நானும் என்னவரும் முடிவு செய்துள்ளோம்” என்றாள். மங்கைக்கும் தென்னரசிக்கும் ஓர் ஒளிப்படலம் வெளிப்படுவதுபோல் தோன்றியது. முடிவு, பழனி பச்சையிடமல்லவா உள்ளது!

# சுற்றுலா 10

மன்னார் குடும்பத்தோடு பெருமாள் சேர்ந்து ஒரு வண்டியில் ஏறினர். ஏனெனில் புதியவர்களுக்குப் போகும் இடங்களைப் பற்றி விளக்கிச் சொல்வார். அவ்வண்டி முன்னே செல்ல, பழனி குடும்பத்தவர் வண்டிசென்றது பின்னே.

திருச்சி மதுரை நால்வழிச் சாலையில் வண்டி சென்றது.

இது **'விராலிமலை'**. முருகன் கோயில் உள்ளது. குறிஞ்சி ஆண்டவர் ஆதலால், பெரும்பாலும் மலை மேல் முருகன் கோயில்கள் உள்ளன என்றார் பெருமாள். தென்னரசி, "கோலாலம்பூர் முருகன் தோற்றப்பொலிவை விளக்கினார். அக்கோயில் தமிழர் ஒருவர் உருவாக்கியது" என்பதையும் கூறினார்.

வண்டி **துவரங்குறிச்சி**யைத் தாண்டும் போது, துவரம் பயறு சிவப்பு நிறம். இந்த மலை - மண் பகுதி சிவப்பாக அமைந்துள்ளதால் இப்பெயர் என்றார்.

"இயற்கை வளத்தோடு அமைந்த பழைய பெயர்களை நினைக்க மகிழ்வாக இருக்கிறது. திருவரங்கம் திருச்சி என வரும் வழியெல்லாம் ஆங்கிலமே பளிச்சிடுகிறது. 'இது தமிழ்நாடுதானா' என்ற ஐயம்கூட உண்டாகிறது" என்றார் தென்னரசி.

"உண்மைதானம்மா, மலையகத்திலும், சிங்கப்பூரிலும் **தமிழ் ஆட்சிமொழிகளுள் ஒன்றாக உள்ளதே.** தமிழ் வழங்கும் இந்த நாட்டின் ஆட்சி மொழி 'இந்தி' என்றுதானே வரிந்து கட்டி

நிற்கின்றனர். நீங்கள் தமிழ்ப்பள்ளியில் வேலை பார்க்கிறீர்கள். இங்கே மழலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம்தானே'' என்று பெருமாள் கூறினார்.

''ஆங்கிலேயனுக்கு அடிமையாய் இருந்த கொடுமையினும் கொடுமை, ஆங்கிலத்துக்கும் இந்திக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலை'' என்றார் தென்னரசி.

''அது என்னையா 'டெம்பிள் சிற்றி'' என்றார் தென்னரசி.

''அம்மா, மதுரைக் கோயில் பழஞ்சிறப்புடையது. ஆதலால் **கோயில் மாநகர்** என்பது பெயர். அதன் பெயரால் அமைந்த உணவு விடுதி அம்மா அது! ''

''**நாங்கள் தமிழ்வளர்த்த மதுரை**' என்று பூரிப்பு அடையும் நகரின் பெயரே தமிழில்லை ; 'கோயில் மாநகர்' என்றால் என்ன என, அப்படியொரு நூலும், பெரியவர் **கி. பழனியப்பனார்** என்பார் எழுதி வெளியிட்டுள்ளார். ஆயினும், தமிழினம் தமிழ்மொழி இன நாட்டுப்பற்றை இழந்து கொண்டு வருவதன் சான்றுகளில் ஒன்று இது'' என்றார் பெருமாள்.

மலையகத்தில் **'வாழையிலைக் கடை' 'பொற்கடை'** என்றெல்லாம் இருக்க, தாய்த்தமிழகத்தில் 'பனானா லீப்', 'சுவல்லரி' என்பது **தமிழ் வழியை முள் போட்டு அடைப்பது இல்லையா**'' என்றார் தென்னரசி.

''**நீங்கள் இதை எண்ணுவதும்கூட அயலகத்தில் இருப்பதால்தான். இங்கிருந்தால் இச்சிந்தனை கூட வராமல் இருந்திருக்கலாம்**'' என்றார்.

வண்டி மதுரை எய்தியது. உணவு கொண்டனர். சொக்கர்கோயில், திருமலை மன்னர் மால் கண்டனர். இசைத்தூண், இசைச் சிற்பம், கம்பந்தடி மண்டபம், மரம் கம்பி கன்மாப் பயன்படுத்தப்படாத 'மால்' அவர்களை வியப்பில் ஆழ்த்தின.

மதுரையில் இருந்து **திருப்பரங்குன்றம்** சென்று குடைவரை முருகன், **தென்பரங்குன்றம்** கண்டு குற்றாலம் போவதற்காகத் தென்காசிச் சாலையில் சென்றனர். திருவில்லிபுத்தூர் **ஆண்டாள்**

கோயில் கோபுரம் கண்டு மகிழ்ந்தனர். நேரே இலஞ்சி வழி ஐந்தருவி சென்று குற்றாலம் தலைமை அருவிப் பகுதியில் தங்கினர்.

முகில் மூட்டம் - சாரல் - அருவிக்கொழிப்பு - மக்கள் கூட்டம் - கடைத்தெரு ஆகியவை கண்டு, "பொழுது கழித்து வந்தால் கூட்டம் குறையும். இயல்பாக நீராடலாம்" என விடுதிக்குச் சென்றனர்.

புறப்பட்டது முதல் பெருமாளும் தென்னரசியும் கலந்துரையாடலாக இருந்ததை அன்றி, மன்னாரோ மங்கையோ ஊடு பேசாமல் கேள்வியராகவே இருந்தனர்.

விடுதிக்குப் போனதும், திருமலையிடம் தென்னரசி, "**அப்பா அரிய தேர்ச்சியர்; காட்சிகளைப் போலவே அக்காட்சிகளை விளக்கும் அப்பா பெருமாளை எங்களோடு வரச்செய்தது**" என்றார்.

பழனியார், "அதற்காகவே அவர்களை விரும்பி அழைத்தேன்; உங்களுக்குச் சொல்ல வேண்டுவன சொல்வார் என்று உங்களோடு வர வேண்டினேன்" என்றார்.

ஏதாவது பருகிவிட்டு ஓய்வாக இருந்து, சற்றே பொழுது போயபின் நீராடி உண்ணலாம். பருவநாளில் '**உறங்கா நகர் குற்றாலம்**' என்றார் பழனி.

அவ்வாறே அமைந்து சொட்டச் சொட்ட மகிழ்வுடன் நீராடி, "இப்படி நீராட்டின்பம் அருமை மிக்க திருமலையாலும் அப்பா ஊர் பார்க்கும் விருப்பாலும் எங்களுக்கு வாய்த்தது" என்றார் தென்னரசி.

## தென்குமரி

**வி**டுதியில் தங்கி முன்னரே எழுந்து, மீண்டுமொரு நீராட்டுப் போட்டுப் **பாவநாசம்** சென்று, மரச்செறிவும் ஆற்றுநீர் ஓட்ட அழகும் கண்டு நெல்லை எய்தினர்.

நெல்லையப்பர் கோயில், அதன் சூழல், நகர், பக்கமெல்லாம் நெல்வயலே வேலியாக அமைந்தமை காட்டிய பெருமாள், "இவ்வூர்க்குக் '**சாலி**' என்றொரு பெயருண்டு" என்றார்.

அவரை நோக்கிய தென்னரசி, "**தமிழ்ப்பெயரா**" என்றார்.

"ஆம்; சாலி என்பது நெல். ஒரு நெல் முளையிட்டு வேரில் இருந்து பலவாக விரிந்து, பல கதிர்களையும், கதிருக்கு நூற்றுக்கணக்கான நெல்லையும் தருவதால் '**மிகுதி**' என்னும் பொருளில் வந்தது என்றார்.

"ஆம் ஐயா, சால என்னும் உரிச்சொல் மிகுதிப் பொருளில் வரும் என்பது, 'சால உறு தவ நனி கூர் கழி மிகல்' என இலக்கணத்தில் படித்திருக்கிறேன்" என்றார் அரசி. நெல்லையில் காலை உணவை முடித்தனர். அங்கிருந்து பாளையங்கோட்டை நாகர்கோயில் என வளமான பகுதிகளைக் கண்டுகொண்டே தென் எல்லையாக உள்ள கன்னியாகுமரியை அடைந்தனர். விடுதி போட்டுத் தங்கி, **133** அடி உயர வள்ளுவர் சிலை, விவேகானந்தர் தவ மாளிகை, காந்தி மண்டபம் கண்டனர்.

"வட வேங்கடம் தென்குமரி என்பது இதுதானா" என்றார் தென்னரசி. இப்பொழுது காண்பது இது. ஆனால், பழநாளில்

இந்நீர்ப்பகுதி நிலப்பகுதியாகக் 'குமரிக்கண்டம்' என்னும் பெயரால் விளங்கியது. இரண்டுமுறை ஆழிப்பேரலைகள் உண்டாகி நிலத்தை மூழ்கடித்து எஞ்சிய பகுதி இது. குமரி மலை, குமரியாறு, பஃறுளியாறு, பன்மலைஅடுக்கம் என்னும் பகுதிகள் எல்லாம் அழிந்தன. இதனைப்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனை, அயலகக் கடலாய்வாளர்கள் ஆய்ந்து நூல்களாக வெளியிட்டுள்ளனர். ஈழம், ஆபிரிக்கா தமிழகம் எல்லாம் தொடர்பரப்பாக இருந்து பிரிந்தவை" என்றார்.

"இந்தச் சுற்றுலா, '**காட்சி இன்பம் மட்டுமன்றிக், கருத்தின்பமும்**' வழங்குவதாக உள்ளது" என்றார் தென்னரசி.

உணவு முடித்து ஓய்வு கொண்டு மாலையில் கடற்கரைக்கு வந்து கதிர் மறைவுக் காட்சி கண்டு களித்தனர்.

ஐயா அரிய காட்சி இது. இங்கிருந்தே கதிர் மறைவு, வள்ளுவர் சிலை, விவேகானந்தர் பாறை எனக் கடலுள் காண முடிகின்றது. **நாம் தங்கியுள்ள இடம் - அங்காடி, விடுதி, பூங்கா - அரங்கம், உணவகம்** - என மிகுந்த பரப்புள்ளதாக உள்ளது. அதனை வடநாட்டார் செய்துளர். விவேகானந்தர் பாறை சார்ந்தது. ஆனால், **தமிழ்நாட்டு அரசு நிறுவிய இச்சிலைக்கு அலுவலகம், விடுதி, அரங்கம் என ஏதாவது உண்டா?**" என்றார் தென்னரசி!

"அம்மா, தமிழர் பெருங்குறை, எந்த ஒன்றையும் திட்டமிட்டு என்றும் பேணவும் வளர்ச்சி காணவும் செய்வது இல்லை! நீங்கள் இருக்கும் இடத்தில் முருகன் கோயில் கட்டிய தமிழர் கோயில் எடுத்தார். இன்று காணும் சிலை எவரெடுத்தார்! அரசே ஏற்று அலுவலகம் - அங்காடி என ஆக்கியது இல்லையா? அதுபோல் **செய்யும் செயலைத் தொடர்ந்து சிறக்கச் செய்யவும் மாட்டார். அவர் செய்ததை அடுத்து வரும் அரசும் வருவாய் பார்ப்பதை அல்லாமல், அதற்கு வேண்டும் ஆக்கம் எதுவும் செய்யாது. மற்றை மாநிலங்களில் தங்களுள் வேறுபாடு இருந்தாலும், மற்றவர்களை எதிர்ப்பதில் முழுமையாக ஒன்றுபட்டே நிற்பார். ஓரரசு செய்த செயலை அடுத்து வரும் அரசு மேலெடுத்துச் செய்யவும் தவறாது**" என்றார்.

ஆழ்ந்து சிந்தித்த தென்னரசி, மலையகத் தமிழருள் சாதி, சமய வேறுபாடு பார்ப்பது பெரிதும் இல்லை. சடங்குகளும் தமிழில் நடைபெறும். ஆனால், இங்கிருந்து வருபவர்களால் ஆக்கம் பெறுவதை விடத் தங்கள் கொள்கை பரப்பாளராகவே வருவது எங்களுக்குள் இடர்ப்பாடு ஆக்குகின்றது. எனினும் **நாங்கள் விழிப்பாகவே பெரும்பாலும் உள்ளோம்** என்றார்.

இரவு, விடுதியில் தங்கினர். காலையில் கடமைகளை முடித்துத் திருச்செந்தூர் நோக்கினர். கன்னியாகுமரி போலவே கடற்கரைக் கோயில்! மலையாண்டி முருகன், கடற்கரை ஆண்டியாக விரிந்த விரிவு. அதன் திருச்சுற்று விரிவு, பள்ளத்தில் ஒரு பாறைக் குடைவு, கடற்பரப்பு எல்லாம் விரும்பிக் கண்டனர்.

''மலை என்ன மணல் என்ன - **எல்லாம் நிலம்தானே**'' என்றார் தென்னரசி.

''நீராகவே உலகப் பரப்பெல்லாம் இருந்து, நீர் குறையக்குறைய முதலில் வெளிப்பட்டது **மலை : குறிஞ்சி**; பின் வெளிப்பட்டது: **முல்லைக்காடு**; மூன்றாவது: **மருதம்:வயல்.** இறுதியில் தோன்றியது **நெய்தல், மணல்.** இந்நிலை ஏற்படக் கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கும். யானைப் போர்க்கருவி வேல் என்னும் படை. அதை ஊன்றி வழிபட்டதால் '**படைவீடு**' என்றனர். படை மட்டும் போதாது, படையைப் பிடித்தவனும் வேண்டும் என்று **வேலனை** உண்டாக்கினர். ஆதலால் தொல்காப்பியர் தெய்வத்தைக் கருப்பொருள் என்றார்'' என்று கூறினார். ''கருப்பொருள் **உருவாக்கப்பட்ட பொருள்** 'நல்ல செய்தி'' என்றார் தென்னரசி.

''முதற்படை வீடு, **பரங்குன்று**: இரண்டாம் படைவீடு **இச்செந்தில்;** மூன்றாம் படைவீடு **திருமலையின் அப்பா!** பழனி இல்லையா. அவர் பெயர்க்குரிய பழனிமலை'' என்றார்.

''ஆக முருகனும் பெருமாளும் எங்களுக்கு வழிகாட்டும் பெரியவர்கள் ஆகிவிட்டீர்கள்'' என்றார் தென்னரசி.

''அம்மா! அருணகிரியாரைக் கேள்விப்பட்டுள்ளீர்களா?''

''இலக்கிய வரலாற்றில் படித்துள்ளேன். திருப்புகழ் பாடியவர்''

“அவர் முருகனைப் பாடல்தோறும் ‘பெருமாளே’ என்று சொல்லித்தான் முடிப்பார்! என்னவோ **நானும் பழனியும் அப்படி நெருங்கிய வீடும் உறவுமாக உள்ளோம்**” என்றார்.

வண்டி கடற்கரை ஒட்டிய ஊர்களையும் காடுகழனிகளையும் கடந்து வந்ததால், அவற்றைக் கண்ட மகிழ்ச்சியில் வந்தனர். வண்டி தூத்துக்குடியை நெருங்கும்போது **உப்பளங்கள், உப்புமலைகள், துறைமுகம், தொழிற்சாலை** என விரிந்து சென்று ஊரை அடைந்தது.

**சிங்கப்பூர்** சுருங்கிய பரப்பு ஆதலால், கடலை மேடாக்கிக் குடியிருப்பு ஆக்கியதுபோல, இவ்வூரும் தூர்த்து, மேடாக்கி - விரிவுபடுத்தப்பட்டதால் ‘தூத்துக்குடி’ என வழங்கப்பட்டது” என்றார். “ஊர்ப்பெயர்களிலேயே அதன் வரலாறும் வெளிப்பட அமைத்த தமிழரும், தமிழும் பாராட்டுக்கு உரியவே” என்றார் அரசி. நண்பகல் உணவை அங்கே முடித்து **கொற்கை**யின் பழமையையும் சிறப்பையும் பெருமாள் கூறிவர இராமேசுவரம் சென்று தங்கினர்.

# மன்னார் பேசினார் 12

**ம**ங்கை உரையாடலின் நயத்தில் தோய்ந்தாலும் அவருக்குள் இருந்த **ஐயம்** ஊடு ஊடு தலைகாட்டவே செய்தது.

அதனால், ''தென்னரசி மணம் பற்றி ஐயா என்ன நினைக்கிறீர்கள்'' என்றார்.

அம்மா சிக்கல் எதுவும் இல்லை. திருமலை அக்கை குடும்பத்தோடு மேலூர்க்கு வந்து பெற்றோரோடு தங்கியிருப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். பழனி, பச்சை இருவரும் தென்னரசி வீட்டார் இசைந்தால், அங்கேயே குடியிருக்க எங்களுக்குத் தடையில்லை. இரு குடும்பத்தவரும் ஆண்டுக்கு ஒரு முறையாவது வந்து போக இருந்தால் போதும் என்று உறுதி கூறியுள்ளார். **நீங்கள் ஒரே முடிவாக இருக்கலாம்.** இன்னும் ஆறு நாள்கள் இருப்பதால் இங்கே பதிவும் செய்துவிடலாம் என்றார்.

மங்கை கையெடுத்து வணங்கினார். மன்னாரைப் பார்த்தார். ''நம் மணம் எப்படி? ஒரு பாட்டி முன் தானே! உன் பாட்டி, என் பாட்டி தாமே! மன்னாரும் பெருமாளும் ஒருவர்தாம்! எனக்கு முழுதான ஒப்புதல்தான்! நமக்கு நல்ல உறவாகிவிட்ட தொழில் முனைவர் மாரியப்பர். வெற்றி மணமும் இப்படித்தானே நடந்திருக்கிறது. பெற்றுப் பெருகி, நூறு குடும்பங்களுக்கு வாழ்வு தருபவராக உள்ளாரே'' என்றார் மன்னார் .

''தென்னரசி என்ன நினைக்கிறார்?'' என்றார் மங்கை.

“எல்லார் பேச்சையும் கேட்டுக்கொண்டுதான் உள்ளேன். திருமலையின் அக்கை உறுதியான முடிவோடுதான் வந்துள்ளார். எனக்குத் திருமலை பிடித்தமானவர்தாம். அதேபோல் உங்களுக்கும், அவர்கள் குடும்பத்துக்கும் இசைவானால் ஐயா சொல்கிறபடி பதிவு செய்ய எனக்கும் இசைவுதான்” என்றார். இராமேசுவரத்தில் விடுதிபோட்டுத் தங்கினர்.

காலைக் கடன்களை முடித்து, கோயில் திருச்சுற்றுத் தூண்களைப் பார்க்கவே மலைத்தனர். வெயில் வருமுன் கடற்கரைப் பரப்பை நோக்கினர். படகுகள், கட்டுமரம், வலைப்பரப்பு, அலைப்பரப்பு, மணற்குன்று என வியந்து பார்த்தனர். காலை உணவை முடித்துப் **பாம்பன் பாலம்** வழியே இராமநாதபும், தேவகோட்டை, காரைக்குடி, புதுக்கோட்டை என வந்தனர்.

பாம்பன் பாலம் - தொடர்வண்டி - பேருந்து, பாலம் தூக்கிக் கப்பல் போக்குவரத்து அவர்களை வியக்கச் செய்தது. ஆனால் அதனினும் பன்மடங்கு நீண்ட கடற்பாலம் **பினாங்கு** கண்டதால், மூவழிப் பயன்பாடே அவர்களுக்குப் புதுமையாயது.

தஞ்சை வேட்கை இருந்தது தென்னரசிக்கு. தஞ்சைக் கோயிலைக் கட்டியவன் ஆகிய இராசராசன் மலையகக் **கடாரம் கொண்டவன்.** இன்றும் அதன் சான்றுகள் - காட்சிச்சாலை ஆகியவை உள்ளன. அதனால் அவ்வேட்கை இருந்தது. தஞ்சையைக் கண்டு ஐயாறு, கல்லணை என்பவற்றையும் பார்த்து மேலூர் திரும்பினர்.

திருமலை அக்கையும் கணவரும் சுற்றுலாப் போனவர்கள் வருகையை எதிர்நோக்கியிருந்தனர்.

முதலாவதாக ஏதாவது பருகிவிட்டு, சற்று நேரம் கழித்து உண்ணலாம் என்னும் திட்டம் கொண்டனர்.

பெருமாள் திருமலையையும், அவன் அக்கை கணவரையும் அழைத்துக்கொண்டு மாடி சென்றார். “நீங்கள் அப்பா அம்மாவுக்குத் துணையாய் மேலூரில் இருந்தால், திருமலை மணமுடித்து மலையகத்தில் தங்கி விருந்தாளிபோல் வந்து போய் இருக்கலாம்” என்றார்.

''நாங்கள் இங்கேயே இருப்பதாக முடிவுசெய்துவிட்டே வந்தோம். சில நாள்களில் எல்லா முடிவும் செய்துவிட்டு மேலூர்க்கே வந்துவிடுவோம்'' என்றனர்.

# நல்லதுதானே! 13

“பெருமாள் வீடு சென்றார். மகனாரிடம் பதிவு பற்றி ஏதாவது...”

“உறுதியாகிவிட்டதா அப்பா”

“ஆமாம். எல்லாருக்கும் ஒப்புதல்தான். திருமலை அக்கா குடும்பத்தோடு மேலூர்க்கு வருதல் உறுதியாகிவிட்டது”

“மிக நல்லது. நான் பதிவாளரைப் பார்த்தேன். முறைப்படி முன்னர் அறிவிப்பு ஒரு வாரம் வேண்டும். இவர்கள் வெளிநாட்டில் வாழ்பவர். பெற்றோர்கள் நால்வரும் இசைந்துள்ளதால் மூன்று நாள் அறிவிப்பில் செய்யலாம்” என்றார்.

“நல்லது. அதுபோதும். அன்றைக்கு உனக்கு வர வாய்க்குமா? நெருக்கடி இல்லையானால் நீ வந்து தலைகாட்டிவிட்டு வந்தால் எங்கள் வேலை எளிதாக முடியுமே” என்றார்.

“நம் பழனியய்யா மகன், திருமலை என்னை அண்ணன், அண்ணன் என்று கொண்டாடுவான். அங்கே இருந்தும் ஊடே ஊடே பேசுவான். என் கடமைதானே அவன் திருமணத்தில் இருக்க வேண்டியது. இன்று வியாழன்; திங்களன்று பதிவை வைத்துக் கொள்ளலாம்; இருபது முப்பது பேர் கூடி நண்பகல் விருந்து உண்ணுமாறு ஒரு விடுதியையும் திருவரங்கத்தில் பார்க்கலாம்; நாமே முன்னின்று செய்துவிடுவோம்” என்றான்.

‘‘**என்னையும் முந்திவிட்டாய்....**’’

‘‘**உங்கள் பிள்ளையப்பா**’’ என்று சொல்லக் கேட்டதும் ‘‘அறம் ‘அறம்’ தான்’’ என்றார்.

அன்று இரவு அனைவரும் பழனியப்பர் மாடியில் கூடிச் சிற்றுண்டி அருந்தினர். ‘‘உணவு முடிந்ததும் திங்களன்று பகல் 10 மணிக்கு நாம் திருமணப்பதிவகம் செல்லலாம்’’ என உறுதி செய்தனர்.

‘‘அறம், அப்பா அவர்கள் குடியுரிமைச் சான்று, திருமலை தொழில் ஒப்பந்தச் சான்று, சித்தப்பா குடியுரிமையட்டை வேண்டியதிருக்கும்’’ என்றான்.

‘‘மன்னார், முன்னரே வேண்டியிருக்கலாம்’’என நான் எடுத்துக்கொண்டே வந்தேன். வானூர்தி என்ன, வீதியில் போகவே அங்கே அடையாள அட்டை வேண்டுமே’’ என்றார்.

‘‘திருமணப் பதிவு முடித்து நாம் உண்பதற்கு விடுதி ஏற்பாடு நாளை வேலைக்குப் போகுமுன் செய்துவிடுகிறேன்’’ என்று அறம் விடை பெற்றான்.

தென்னரசி, ‘‘இந்தச் செய்தி மாரியப்பர் வெற்றிக்குத் தெரிய வேண்டுமே’’என்று திருமலையை நோக்க, ‘‘நான் செய்தியைச் சொல்லி வாழ்த்தும் பெற்றுவிட்டேன்’’என்றான் திருமலை!

‘‘**திருமணம் என்றதும் உங்களுக்கு அவ்வளவு துள்ளல்**’’ என்றார் தென்னரசி! அனைவரும் சிரித்தனர்.

‘‘இன்னொன்று’’ என்றான் திருமலை!

‘‘நாம் வரும் வானூர்தி நிலையத்திற்கே வந்து நம்மை அவர்கள் வீட்டு முதல் விருந்தாளியாக வைத்துக்கொள்வார்களாம்’’

‘‘எனக்குத் தெரியாமலே என்னென்னவோ; நடக்கிறது’’ என்றாள் தென்னரசி.

‘‘நல்லதுதானே’’ என்றார் மங்கை!

அனைவரும் கையொலியோடு சிரித்தனர்.

## பதிவும் வரவேற்பும் 14

திங்கள் கிழமை திருமணப் பதிவகம் சென்றனர். அறம் மாலைக்கு ஏற்பாடு செய்திருந்தார். திருச்சியில் கிடைப்பவை எல்லாம் அரங்கத்தில் கிடைப்பதால் வேண்டும் உடைகளை எடுத்துக் கொண்டனர்.

மன்னார் , பணம் தரப் பையை எடுத்தார். திருமலை "உங்கள் பையைக் கொடுங்கள்" என்று தன் கையில் வாங்கித் தன் பையுள் வைத்துக் கொண்டான்!

"நீங்கள் 'ஊர்' என்று கூறும் இவ்வூர் எங்கள் ஊர்தானே" என்றார் பழனி.

"ஊர் என்றால் உறையூர். அது சோழன் தலைநகர்; சோழன் கடாரம் (காழகம்) கொண்டதால் ஊர் என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்" என்றார் பெருமாள். "உறையூர் திருச்சியின் ஒரு பகுதியாக உள்ளது" என்றார்.

"**ஐயாவோடு இருந்தால் புதிய புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். தடையில்லாமல் விடை கூறச் சிலர்க்குத்தான் முடியும்**" என்றாள் தென்னரசி.

"சிலர் ஆசிரியராக இருப்பர். ஆனால் பெருமாள் ஐயா, ஆசிரியர்க்கு ஆசிரியர்" என்றார் பழனி.

“நீங்கள் மூன்று நாள் பழக்கம். எங்களுக்குள் முப்பதாண்டுப் பழக்கம். பொழுது போவதே தெரியாமல் பேசி மகிழ்வோம்” என்று பழனி மேலும் கூறினார்.

திருமணப் பதிவு நடந்தது. மணமக்கள், பெற்றோர், சான்றாளர் என அனைவர் ஒப்பமும் முடிந்தது. பதிவாளர் முன்னிலையிலேயே பெருமாளையா மாலை எடுத்துத்தர மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டனர். பதிவாளர் வாழ்த்துக் கூறினார். அறம் ஏற்பாடு செய்திருந்த விருந்து விடுதிக்குச் சென்றனர். விடுதியினரே உணவு பரிமாறினர். விருந்துண்டதும் வாழ்த்தரங்கம் சென்றனர்.

பழனி வரவேற்புரைத்து, “**ஐயா, பெருமாள் அவர்கள் வாழ்த்துவார்**” என்றார்.

“இனிய மணமக்களே, மணமக்களின் பெற்றோர்களே அன்பு நண்புகளே அனைவரையும் வணங்கி மணமக்களை வாழ்த்துகிறேன். **விருந்தே புதுமை** என்றார் தொல்காப்பியர். இயல்பாக நாம் வீட்டில் உண்ணும் உணவினும் வகைகள் கூடிய உணவு உண்டோம். இது விருந்துதான்.

மணமகள் நம்மூரினர் என்றாலும் அயலகத்தில் வேலை பார்ப்பதால் அவரும் விருந்தினரே! மணமகனார் அயலகத்தில் இருந்து நம்மூர் வந்த விருந்தினரே. நாம் எவரும் எதிர்பாராத திருமணம். ஆதலால், இத்திருமணமும் விருந்தே!

மணமகன் **திருமலை, அவர் வடவேங்கடம்!**

மணமகள் **தென்னரசி; தென்குமரி; தமிழரசி.** ஆதலால், வடவேங்கடமும் தென்குமரியும் இணைந்து தமிழ் அமிழ்தாக விளங்குதலை,

“வடவேங்கடம் தென்குமரி” என்றார் தொல்காப்பியர். அவர் வாழ்வியல் இலக்கணம் படைத்தவர். அகவாழ்வு, புறவாழ்வு பற்றிக் கூறியவர்.

அந்த அகமும் புறமும் சிறக்கவும், அது வழிவழியாகச் சிறக்கவும் வேண்டும் என்று கருதிய அவர்,

“இல்லற வாழ்வைப் பொருளொடு புணர்ந்த பக்கம்’ என்றார். “பொருளுடையார் எல்லாம் உடையார்” என்றார் வள்ளுவர். பொருள் தேடுவதற்காக மலையகம் சென்ற திருமலை, உயரிய பெண் தெய்வப் பொருளை அடைகிறார். உயரிய இன்பப் பொருளை அடைகிறார். “தம் பொருள் என்ப தம்மக்கள்” என்னும் மக்கட் செல்வத்தை அடைந்து தம்மினும் சிறந்து வீடும் நாடும் போற்ற நல்வாழ்வு வாழ்வார்களாக! வாய்த்த பொழுதெல்லாம் விருந்தினராக வந்து நாம் அனைவரும் மகிழ விளங்குவார்களாக என வாழ்த்தி அனைவரையும் வணங்கி விடை பெறுகிறேன்” என்றார்.

மணமகனார் **தென்னரசி** நன்றி கூறுவார் என்றார் பழனி.

“வீட்டாளராகவும் விருந்தாளராகவும் கூடியுள்ள பெருமக்களே, உங்கள் அனைவரையும் என் சார்பாகவும் என் கணவர் சார்பாகவும் வணங்கி என் நன்றியுரையைக் கூறுகிறேன்.

நாங்கள் சுற்றுலாவினராக மலையகத்தில் இருந்து வந்தோம். நானும் என்னவரும் மணமக்களாக எங்கள் நாட்டுக்கு மீளப்போகிறோம். இந்த இனிய வாய்ப்புக்கு முதல் காரணமாக இருந்தவர் பெருமாள் ஐயா! முன்னின்று செய்தவர் எனக்குக் கிடைத்தற்கு அரிய **அண்ணன் அறம்.**

“அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை”

“அறத்தான் வருவதே இன்பம்” என்றும் குறள்மணிகளின் வடிவாக, எங்கள் நேரில் அறத்தைக் காண்கிறோம். ஒரு குடும்பத்தவர் எப்படி இருக்க வேண்டும்; **ஒரு குடும்பத்தவரும் மற்றொரு குடும்பத்தவரும் எப்படி இருக்க வேண்டும்** என்பதற்கு எடுத்துக்காட்டாக என்முன்னர் இருக்கும் அப்பா பழனி, அப்பா பெருமாள் குடும்பத்தவர் உளர். பிறந்தது பெண்ணானால், **‘அம்மா’** என்பதும் ஆணானால் **‘அப்பா’** என்பதும் நம் பரம்பரைப் பழக்கம். **மணத்துக்கு முறைபார்ப்பது கட்டாயம். வாழ்வுக்கு அனைவரும் பெற்றோரும் பிள்ளைகளுமே என்றால், மாமி மருமகள், மாமன் மருமகன் முட்டல் மோதல் ஏற்படாது.** அது முறைகேடு ஆகாது. அது நன்முறையாகப் பளிச்சிடும். அதனை நாங்கள் மேற்கொள்வோம். ஒன்றை நான் சொல்ல வேண்டும்; ஊர்த்தூய்மை. வடிகால் கழிவு போக்குவரவு என்பவை எங்களை

வருந்தச் செய்கிறது. எங்கள் நாட்டின் தூய்மையும் போக்கு வரவும் அவற்றை நினைவூட்டுகின்றன. நாங்கள் புறப்பட்டது முதல் இந்நேரம் வரை எங்களுக்கு ஒரு காசு தானும் செலவில்லை. எங்கள் காசுப் பையையும் என்னைச் சுருட்டுவதற்கு முன்னரே, என் அப்பாவிடமிருந்து சுருட்டிக்கொண்டார் என்னவர். அதிலுள்ள தொகையை அப்படியே அப்பா பெருமாள் அவர்களிடம் தந்து இந்தத் தெருவின் வடிகாலை மூடுவடிகால் ஆக்க வேண்டிக் கொள்கிறேன். இங்குள்ள பெருமக்கள் நினைத்தால் மேலூரைத் தூய்மையின் மேலூராக்கி விடலாம் என வேண்டிக் கொள்கிறேன்.

இது நன்றியுரையா என்றால் நலவுரை! நலத்தில் இருந்து தான் நன்றி பிறக்கும்: நாங்கள் வாழ்வியல் நலம் பெற்றோம் நன்றியுரைத்தோம். வணக்கம்.

வாழிய நலனே! வாழிய நிலனே! என்றார் தென்னரசி! கூடியவர்கள் மகிழ்ந்து கை முழக்கம் செய்தனர். திருமலை அப்பாவிடம் பையைத் தந்தார். அவர் அதிலுள்ள பணத்தை எடுத்துப் பெருமாளிடம் வழங்கினார்.

உரிய நாளில் பழனி, மன்னார் குடும்பத்தவருடன் பெருமாள் உடன் சென்று வானூர்தியில் ஏற்றிவிட்டு மகிழ்வுடன் வந்தனர்.

மணமக்களை வரவேற்க வானூர்தி நிலையத்திற்கு, முன்னரே வந்து விடுவதாக மாரியப்பரும் வெற்றிச் செல்வியரும் உரைத்தனர். அவ்வாறே வந்து மணமக்களுக்கு மாலை சூட்டித் தம் இல்லத்து விருந்தாளியராக அழைத்துச் சென்றனர்.

## மாசிலா மாண்பு 15

பெருமாள் ஐயாவினிடம், பழனி சென்றார்... என்ன ஏதவாது செய்தியா என்றார். திருமலை வானூர்தியில் மாரியப்பர் - வெற்றியார் வழங்கிய வரவேற்புப்படம். உங்களிடமும் அறத்தினிடமும் காட்டச் சொன்னான். தம்பி உள்ளாரா? என்றதும் அறம் முன்னின்றான். மூவரும் படம் பார்த்து மகிழ்ந்தனர். நாம் இருவரும் காலை உணவின்பின் ஒய்வாகப் பேசவேண்டும். "வேறு எங்கும் வெளியூர் இல்லையே!" "இல்லை! பேசலாம்" என்றதும் பழனி வந்தார். பெருமாள் பத்துமணிபோல் வந்தார்.

"வேறு பெரிதாக ஒன்றும் இல்லையே."

"இல்லை, மன்னார் வந்தது முதல் அனமந்து புன்முறுவலோடு இருந்ததை அல்லாமல் **கலகலப்பாக எதுவும் பேசவில்லையே!"**

"அவர் அலையற்ற ஆழ்கடல்! அலைகுலை அவதியெல்லாம் முடிந்து விட்ட அமைதி நிலையில் இருந்தார்."

"அதைப்பற்றி உங்களுக்கென்ன?"

"அவருக்கு ஒரு வேளை நிறைவு இல்லையோ என..."

"இல்லை! நிறைகுடம் ததும்பாது என்பது பழமொழி. ஒருவர் உணர்வைப் பார்த்த பார்வையில் முடிவு செய்துவிட முடியாது. அருமையாக முடிவு செய்தவர் அவர். அவர் புரிவு தெரியாக் காலத்தில் எங்கேயோ எவர் வழியோ போனது! முன்னோர்கள் கூலி

வேலையில் பட்ட அவலம்! அத்துயர் நீங்கித் தோட்டமும் வீடும் வாங்கிய நிலையில் பெற்றவர்களை இழந்தது, தாமே ஆக்கி உண்டது, மங்கையை மணந்தது, அறிவறிந்த மகளைப் பெற்று வரிசை வரிசையாக வந்து சேரும் நலங்கள், நம் இருவர் குடும்பத் தொடர்பு, நம் மக்களும் நாமும் ஒத்தியங்கி ஒருவருக்கு ஒருவர் உதவியாக நின்றது **எல்லாமும் கண்ட பூரிப்பில் வாயெடாது அமைந்தவர் அவர்.** மகளும் நாமும் தச்சுக் கூடம் போக, தென்னரசி திருமலையைப் போகச் செய்து சமைத்தது, கண்டது, மங்கை தாம் அவரை மணம்புரிய நேர்ந்ததைக் கூறியபோது யார் செய்தியோ என அவர் கேட்டது, **அவர் மிகமிகப் பக்குவப்பட்டவர்** என்பதைக் காட்டவில்லையா?

அவரும் குடும்பத்தவரும் உயரிய உரிமையராய் இல்லாவிடில் திருமலையோடு வருவரா? நாங்கள் முதுமையில் மகளைப் பிரியக் கூடாது என்பது போல், நீங்களும் முதுமையில் மகனைப் பிரியக்கூடாது என்பதை நினைத்துப் பேச, மங்கைக்கு எவ்வளவு பெரிய மனம் வேண்டும்! தென்னரசி அப்பா பணப்பையை என்னிடம் தரச் செய்து மூடுவாய்க்கால் அமைக்கச் சொல்ல, அப்பா அம்மா தான் ஆகிய மூவரும் **ஒத்த ஒப்புரவு நோக்கர்** என்பது இல்லாமல் முடியுமா?

ஆதலால், மன்னார் அமைதி **மாசிலா மாண்பு அமைதி!** சொன்னால் நம் எல்லாரைப் பார்க்கிலும் அமைந்த பூரிப்பர் அவரே என்றார். தங்களால் காணமுடிந்ததைக் காண முடியாமல் நாம் சிறிது விரைவு பட்டுவிட்டோமோ என்ற எண்ணத்தில் உழன்றேன். தெளிவு செய்தது மிகுந்த நிறைவாயிற்று என்றார்.

தென்னரசியாலும் திருமலையாலும் நாம் என்றும் நலமே பெறுவோம்" என்றார் பெருமாள்.

## கூடுதுறை 16

திருமலை - தென்னரசி திருமண வரவேற்பைப் பேரன்பர் **முத்துசாமி உணவக அரங்கத்தில்** மாரியப்பர் வெற்றிச்செல்வியர், தமிழ்நெறிக் கழகக்கிள்ளாள் கிளை சார்பில் ஏற்பாடு செய்திருந்தனர்.

திரு. **அருள் முனைவர்** தலைமையில் வரவேற்பு நிகழ்ந்தது. திருமிகு. **துரை, மனங்கவர்ந்தார். இமயவரம்பர், மரு.புரவியப்பர், பூமணி பெருமாள், வெற்றிச்செல்வி மாரியப்பர்** வாழ்த்தினர். தென்னரசி நன்றி கூறினார்.

இக்காட்சியை நேரில் காண்பது போல் பழனியார் பெருமாளர் குடும்பத்தவர் கண்டு மகிழ்ந்தனர். விடுமுறை நாள் முடிந்தமையால், மன்னார் தம் தோட்ட வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அன்று தோட்ட வேலையர் அனைவர்க்கும் விருந்தளித்துச் சம்பளத்தோடு விடுமுறையும் வழங்கினார் மன்னார். அவ்விழாவில் தென்னரசியுடன் பணியாற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். மணமக்களுக்குப் பரிசுகளும் வழங்கினர்.

மறுநாள் தென்னரசி பள்ளிக்கும், திருமலை தொழிலகத்துக்கும் சென்றனர்.

நாளை என்று தள்ளாமல் மன்னார் தென்னரசி - திருமலை திருமணச் சான்றுடன் குடியுரிமைப் பதிவகக் கடமையை மேற்கொண்டார்.

மேலூரில் இருந்து அழகம்மை தன் துணைவரோடு அரும்பாவூர் சென்று வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு, எடுக்க

வேண்டும் பொருள்களை எடுத்துக் கொண்டு மேலூர் வாழ்வினர் ஆயினர். தம்மகளே தம்மோடு வந்து விட்டதால் பச்சைக்கும் பழனிக்கும் பெருமகிழ்வாயிற்று.

அவர்கள் மேலூர்க்கு வந்த செய்தியறிந்த மங்கை பெருமகிழ்வுற்றார். ஏனெனில், அவர்க்குத் தென்னரசி மகளாக இருந்ததோடு, **வீட்டுமருத்துவராகவும்** இருந்தார். மகள் கண்காணிப்பு கட்டாயமாக வேண்டியிருந்தது. தென்னரசி ஊசி மருந்து ஏற்றவும் உரிய மருந்தும் உணவும் தரவும் பழக்கப்பட்ட செவிலியராகவும் இருந்தார். அவரைப் பிரிந்திருக்க முடியாமைக்கு அது தலைக்காரணமாகவும் இருந்தது. அந்தக் கவலை தீர்ந்துவிட்டமையால் ஏற்பட்ட நிறைவு **மனமருத்துவமும்** ஆயிற்று. அதனை அரசியும் உணர்ந்தார். மன்னாரும் அறிந்தார். காடு தோட்டம் எனப் போகாமல் வீட்டிலேயே அடைந்திருந்த மங்கை, அங்கே செல்லவும் வேலை நிலையை அறியவும் தொடங்கியது. வேலை செய்பவர்களுக்குத் "**திருமணம் வழங்கிய தெம்பு**" என விளங்கியது.

தென்னரசி பள்ளி வேலை முடிந்ததும் திருமலை தொழிற்சாலைக்குச் செல்லவும், வேலைப் பாடு மேம்படக் கருத்துரைப்பதும் உடனாகி வீடு வரவும் வாய்ப்பாயிற்று.

மன்னார் மங்கை தென்னரசி மூவரும் மட்டும் இருந்தபோது கலந்து பேசினர். திருமணத்தால் திருமலை **தம் பெற்றோருக்கு விடுத்து வந்த தொகையைத் தவறாமல் விடுக்க வேண்டும்.** அக்காள் குடும்பம் அங்கே வந்துவிட்டதால் செலவும் மிகும். திருமலை தந்த தொகை நின்றுவிட்டால் அவர்களுக்கு இடராகும் என முடிவு செய்து, திருமலையிடம் கூறினர். மகனை விட்டது போல் வருவாயையும் விடுதல் என்பது முறையாகாது; நமக்கோ தோட்ட வருவாய் என் வருவாய் எனக் குறைவு இல்லையென்றாள் தென்னரசி. இனி மேலூர்க்குடும்பமும் நம் குடும்பம்தானே என்றார் மங்கை. வழக்கம் போல் புன்முறுவலோடு ஏற்றார் மன்னார்.

வழக்கம் போல் விடுக்கும் தொகையைத் திருமலை விடுக்க மகிழ்ந்த பழனி, பெருமாளிடம் செய்தியுரைத்தார்.

வறுமையில் இருந்து வளமை பெற்ற குடும்பம் இடர்களையெல்லாம் சந்தித்த குடும்பம். அதனால், போலிமைக்கும்

கெடுவழிக்கும் ஆட்பட்ட குடும்பம், முன்னை நிலையை மறந்து விடுவது போல் மறந்துவிடாமல் தம் பழமையைப் போற்றும் பண்பாட்டினராக விளங்குகின்றனர்.

இப்படிப்பட்ட மணவுறவே ஈராறுகள் கூடும் "கூடுதுறை" போல் அமைந்து இரண்டறக் கலந்து, ஒன்றாகிச் சிறப்பது என்றார் பெருமாள்.

சுருங்கிய தன்னலங்கருதும் குடும்பங்களே பிரிந்து பிரிந்து, ஒட்டும் உறவும் இன்றித் தாமும் இடர்ப்பட்டு, பிறரையும் இடர்க்கு ஆட்படுத்தி இன்ப வாழ்வைத் துன்ப வாழ்வாக்கி விடுகின்றனர் என்ற பெருமாள் விளக்கத்தில் பச்சையும் மகிழ்ந்து தேநீர்க் குவளைகளோடு வந்தார்.

# நான் சொல்லியிருக்கக் கூடாது 17

**ப**த்து நாள்கள் தொடர்ந்து திருமலை விடுமுறையில் இருந்ததால் செய்த பொருள்கள் அங்காடிக்கு அனுப்பாமல் இருந்தன.

அதிலும் **பினாங்குக்கு** நிரம்ப விடுக்க வேண்டியிருந்தது. அதனால் பொருள்களை ஒப்படைத்து அங்கிருந்த பொருள்கள் சிலவற்றை எடுத்து வர வேண்டிச் சென்றான். அவன் தன் பணியை முடித்துவர மூன்று நாள்கள் ஆகும்.

மன்னார் மங்கை தென்னரசி மூவரும் இருந்தனர். தென்னரசி அப்பாவினிடம், "**அப்பா எங்கள் திருமணத்தில் உங்களுக்கு முழுஒப்புதல் இல்லையா**" என்றாள்.

"ஏன் இப்படிக் கேட்கிறாய்?"

"நீங்கள் இயற்கையாகப் பேசிப் பழகாமல், புன்முறுவலோடும் அமைதியோடும் மட்டும் இருந்தீர்கள். அம்மா, நான் பேசினோம்" என்றாள்.

"உங்கள் திருமணப்பதிவு, குடியுரிமை பற்றிப் பதிவு ஆயவை பற்றிப் பெருமாளையா கேட்டதற்கு உரிய வழிமுறைகளைச் சொல்லவில்லையா? **எனக்கு உள்ளுக்குள் உனக்கும் திருமலைக்கும் விருப்பம் இருப்பது தெரியும்.** உங்கள் திருமணம் உவப்பானதே என்பதும் தெரியும். ஆனால் உங்கள் இருவருக்கும் -

அம்மாவுக்கும் உனக்கும்தான் **எப்படித் தன்னலம் வந்தது** என்பது எனக்குப் புரியவில்லை!

நம்மைப் போல் அவர்களும், திருமலை தன் ஒப்பந்தம் முடித்து ஊர்க்கு வர வேண்டும். எங்கள் முதுமையில் அவன் உடனிருக்க வேண்டும் என்று எண்ணலாம் அல்லவா? **அம்மா தென்னரசியைப் பிரிந்து இருக்க முடியாது என்றதும் நீ நாங்கள் சுற்றுலாச் செல்லாமல் நாட்டுக்குச் செல்கிறோம் என்றதும் சரிதானா? அம்மா அவள் நிலை கருதிச் சொன்னாலும், நீ சொல்லலாமா?** அப்படிச் சொல்வதாக இருந்தாலும், இப்பொழுது சுற்றுலாவாகத்தான் வந்தோம். ஊர்க்குப் போய் எண்ணிப் பார்த்து முடிவு செய்வோம் என்று நயமாகச் சொல்ல முடியாதா? ஆயிரம் வினாக்களைப் பெருமாளையாவிடம் எழுப்பினை! அது உன் அறிவு விளக்கம்! அவர் உன்னிடம் உங்களைப் போல் பழனி குடும்பத்தாரும் எங்களுக்கு வீட்டோடு இருக்கும் மருமகள்தான் இருக்க வேண்டும் என்று (பழனி குடும்பத்தார்) நினைக்க மாட்டார்களா? என்று ஒரு வினா எழுப்பி இருந்தால், என்ன மறுமொழி சொல்வாய்? இவையெல்லாம் தான் யான் புன்முறுவலும் அமைதியுமாய் **விருப்பு வெறுப்புக் காட்டாமல் ஓர் ஆளாக உடன் இருந்தேன்.** என் ஆழ்ந்த எண்ணம் வெளிப்படுத்தத் திருமலை இப்போது வெளியிடம் போயிருப்பதுதான் காரணம்'' என்றார்.

‘‘**அவர்களுக்கு ஒரு மகள் உள்ளாளே**'' என்றார் மங்கை.

‘‘அவர் இல்லை என்றால், நாளைக்குக் கணவர் நம் வீட்டுக்குப் போவோம். இங்கே இருக்க முடியாது என்றால் அவர்க்கு முதிய பெற்றோர் இருந்தால்? **நம்மை எண்ணும் நாம், நாலையும் எண்ண வேண்டும் இல்லையா?**'' என்றார்.

‘‘உங்களைக் கவலைப்படுத்த நான் சொல்லவில்லை. நாளைக்கு மகள் வீட்டார் பாவூர் போக, திருமலை ஒப்பந்தம் முடிந்து ஊர் செல்ல நேர்ந்தால் இவற்றையும் எண்ண வேண்டும்தானே'' என்றார்.

தென்னரசி, உங்கள் ஆழ்ந்த சிந்தனையும் வினவலும் மிகமிகச் செம்மையானவையே. அம்மா சொல்லியிருந்தாலும், **நான் சொல்லி இருக்கக்கூடாது!** என்ற தென்னரசி, "அப்பா, திருமலைக்கும் எனக்கும் காதல் இல்லை என்றாலும், வேறு யாரையும் என்னால் நினைக்க முடியவில்லை என்னும் **அழுந்திய உணர்ச்சிதான், என் சிந்தனையை மழுங்கடித்துவிட்டது** என்று 'பொலபொல' எனக் கண்ணீர் விட்டாள்! அவள் கண்ணீரைத் துடைத்துத் தழுவிக்கொண்டு, பெருமாளையா குடும்பம் முன் வீட்டுக் குடும்பம் என்றாலும், தன் வீட்டுக் குடும்பமாக இருப்பதால் நாம் நம்பி இருக்கலாம். அறமும் அருமையான பிள்ளை! அறம் எவற்றிலும் முன்னின்று செய்தது போல் **அழகம்மை கணவர் ஈடுபாட்டோடு முன்னின்று செய்யவில்லையே! அவர் எங்கிருக்கிறார் என்று தேடிப்பார்க்கத்தானே இருந்தார்!** அவர் ஒட்டா ஒட்டும் புரியவில்லையா?"

"ஏன் அப்படி இருந்தார்?"

"**அவர் குடிப்பவர்;** அவர் திருந்துவார் மேலூர்க்கு வந்தால் என்பது, **திருமலை அக்கை எண்ணம்.** 'குடியர் எளிதில் திருந்தார்!'

"யாரும் சொல்லவில்லையே. பழனிக்கோ, பெருமாள் ஐயாவுக்கோ தெரிந்திராது. அக்காளுக்கு மட்டும் தெரியும். தம்பிக்கோ, பிறர்க்கோ தெரியக் கூடாது என்பதற்காக, **அவரை முதல் நாளே அரும்பாவூர்க்குப் போகச் சொல்லிவிட்டார்கள்;** அரும்பாவூரார் ஒருவர் என்னிடம் சொல்லிய செய்தி இது; **இதை** நம்மோடு **வைத்துக்கொள்வோம்.**

**இருவீட்டார் நிலையும் இனிச் சிந்திக்கத்தக்கதில்லை. இந்நிகழ்வால் நான் கற்றுக்கொண்ட பாடம் ஒன்று!**

நாம் மட்டும் ஊரில்லை உலகுமில்லை! நாம், **உதவியின்றித் தவிக்கும் முதியர்க்கு ஓர் இல்லம் அமைக்க வேண்டும்** என்பது! இயற்கை இயங்கியல் கற்பித்துக் கொண்டே உள்ளது. கற்றுக் கொள்வார் அரியர். கற்றுக் கொண்டாலும் செய்தற்கும் வாய்ப்பும்

துணையும் அமைதல் அருமை! நமக்கு எந்தத் தடையும் இல்லை. இடர்ப்பாடுகள் எல்லாமும் பட்டவர்கள் நாம். இடர்ப்பாட்டுக்கு அஞ்சி முற்படவே திட்டம் கொள்பவர்கள் நாம். இத்தோட்டக் காட்டில் எந்தத் துணையும் இல்லாமல் தவிப்பவர்களையும், துயர் தாங்காமல் தம்மை மாய்த்துக் கொள்பவர்களையும் காண்பவர்கள் நாம். ஆதலால் திருமலை வந்ததும், அவரிடமும் கலந்து கொண்டு நல்ல முடிவு செய்வோம்!'' என்றார் மன்னார்.

# ஒரு திங்கள் ஊதியக் கொடை 18

மூன்றாம் நாள் திருமலை வந்தான். போன வேலை நல்ல வகையில் முடிந்ததைக் கூறினான். "அங்கேயுள்ள வணிக வளாகம் விரிவானதாக இருப்பதால் தொழிற்கூடமும் அமைக்க வேண்டும் என்ற எண்ணமும் மாரியப்பர்க்கு உண்டாகியுள்ளது" என்றான்.

"இன்று வேலையா ஓய்வா" என்றார் மன்னார்.

"உங்களை அங்கே போகச் சொல்வாரா?" என்றார் தென்னரசி.

"பொருள் நாட்டம் உடையவர்க்கு, அதனை மேலும் மேலும் விரிவாக்கவே தோன்றும். அவர்க்கும் அந்த நாட்டம் இருந்தாலும், குடும்பப்பாங்கிலும் குறையாதவர் அவர். ஆதலால் என்னை ஊடு ஊடு மேற்பார்வை பார்க்கச் சொல்வாரே அல்லாமல், அங்கே தங்கி அப்பொறுப்பை எடுத்துக் கொள்ளச் செய்யமாட்டார்" என்றான்.

தென்னரசி பள்ளிக்குப் புறப்பட்டார்.

திருமலை, மாரியப்பரைக் காணச் சென்றான். மன்னாரும் மங்கையும் முதன் முறையாகத் தோட்டத்தை இணைந்து பார்க்கச் சென்றனர். தலைச்சி, தலைச்சன் முதல் அனைவர்க்கும் வியப்பாக இருந்தது. "நாம் ஒரு குடும்பத்தவர். உங்களுக்கு நானும் மங்கையும் ஒரு செய்தி சொல்ல வந்தோம். தென்னரசி திருமலை திருமணப் பரிசாக உங்கள் அனைவருக்கும் ஒரு திங்கள் ஊதியம் வழங்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தத் திங்கள் சம்பளத்தோடு அது சேர்த்து

வழங்கப்படும் என்ற செய்தியை உரைக்க வந்தோம்'' என்றனர். கூடியவர்கள் கையொலி செய்து நன்றி என்றனர்.

''உழைப்பவர் உழையாதவர் வளமையர் வறியவர் என எவருக்கும் வாயும் வயிறும் உண்டு. நம் தோட்டத்துக் கட்டொழுங்கு மாறாமல் வாழ்பவர்கள் - உழைப்பவர்கள் நீங்கள். குடிப்பவர், கொடுமையர்க்குக் கொடுப்பது குடிகேடு! உங்களுக்கு இயன்றதைக் கொடுப்பது குடிநலம்! ஆதலால், நாங்கள்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்'' என்று சொல்லி விடை பெற்றனர்.

மாலையில் தென்னரசியும் திருமலையும் சேர்ந்து வீட்டுக்கு வந்தனர்.

''மாரியப்பரும் வெற்றியும், நல்ல கட்டில் மெத்தை தலையணை, ஒப்பனைக் கண்ணாடி மேடை எனப் பரிசு வழங்கினர். அவை வண்டியில் வருகின்றன'' என்றனர். ''அவர்களும் நம்மைப்போல் இழப்பும் துயரும் பட்டு உழைப்பால் உயர்ந்தவர்கள்'' என்றார் மன்னார்.

தங்கள் திட்டத்தை அவர்களிடம் கூறினர். அனைவரும் கொண்ட மகிழ்வையும் உரைத்தனர். நல்ல செயல் என்னும்போது, கட்டில் மெத்தை வண்டி வந்தது. அவற்றை எடுத்து வீட்டுள் போடவும் வைக்கவும் வேண்டிய இடத்தில் அமைத்தனர்.

''தாமும் மங்கையும் பாட்டியும் முதன்முதலாகச் சந்தித்ததும் இன்பம்!

தாமும் தென்னரசியும் திருமலையும் தொழிற்கூடத்தில் முதன்முறை சந்தித்ததும் இன்பம்!

மேலூரில் பதிவு செய்து வரவேற்பு நிகழ்ந்ததும் இன்பம்!

''இன்பவகை வேறுவேறு! ஆனாலும் இன்ப உணர்வு ஒன்றே'' என்றார் மன்னார்.

இவையெல்லாம் தம் நலம் சார்ந்த இன்பம். நாம் இனிச் செய்யவேண்டியது பொதுநலவின்பம்'' என்றார் மன்னார்.

# குடி – புகை – யற்ற இல்லம் 19

“உங்கள் முதியவரும், உங்கள் உடன் இருப்பை விரும்பினர். அக்கை அழகம்மை இருப்பதால் ஒப்பினர். இங்கே மங்கையும் தென்னரசி உடனிருக்க வேண்டும் என்றும், தென்னரசி எங்களுடன் இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். இவர்களைப் போலத்தானே மற்றை முதியவர்களும் இருப்பர். அவர்களுள் குடிப்பழக்கம், புகைப் பழக்கம் இல்லாதவராய், வெளி நாட்டில் மக்கள் இருக்க, இங்கே தனித்து இருந்து ஏங்குபவராய் உள்ளவர்களை நம் வாய்ப்புக்குத் தக இருக்கச் செய்யும் **முதியோர் இல்லம்** அமைக்க வேண்டும். **வாய்ப்புடைய மக்கள் உள்ளவர்** எனின், **அவர்களுக்கு ஆகும் செலவை வாங்கவும் வாய்ப்பு இல்லாதவர் எனின் நம் செலவில் இருப்பவராகவும் கொள்ள வேண்டும்.**

எவரிடமும் நன்கொடை பெறுதலோ, அரசு உதவி பெறுதலோ இல்லாமல் நம்மளவில் செய்வதாக இருக்க வேண்டும். ஆண்முதியர், பெண்முதியர், குடும்ப முதியர் என எம்முதியரும் இருக்கலாம். மருத்துவர் ஒருவர் ஞாயிறு தோறும் காலை 8-10 மணிவரை இங்கே வந்து வேண்டுவ செய்ய நாம் ஏற்பாடும் செய்ய வேண்டும். காவலாள், சமையலர் மற்றை வேண்டுவ செய்ய வேண்டும்” என்றார்.

“இது மாமி, தென்னரசிக்குத் தெரியுமா?”

“தெரியும்!”

“உங்கள் மூவர்க்கும் உடன்பாடானது எனக்கும் உடன்பாடே. தென்னரசிக்குக் கணவன் என்றாலும் நான் உங்கள் பிள்ளையே” என்றான்.

"உங்கள் திட்டம் உயரிய நலத்திட்டம்! நானும் ஊடே ஊடே போய்ப் பார்த்துக் கொள்வேன்." என்றான் திருமலை.

தனி ஒதுக்கிடம் போகாமல் தோட்டத்தின் ஒரு பகுதியில், தங்கள் சமையல் உண்ணல் ஆகியவற்றுக்குக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்தனர்.

கட்டடம், தோட்டப் பொறுப்பு;

மற்றை ஏற்பாட்டுப் பொறுப்பு; தென்னரசி சம்பளப் பொறுப்பும், தங்குபவர் பங்களிப்புப் பொறுப்பும். திருமலை வழக்கம் போல் பெற்றோர்க்குப் பணம் விடுத்தல் எனத் திட்டப்படுத்தினர்.

திட்டம் நிறைவேற ஆறு திங்கள் ஆயின. நிறைவு பெற்றதும் **பழனியாரும் பச்சையம்மையும் பெருமாள் ஐயாவும் திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டனர். மாரியப்பர் - வெற்றியம்மையும்** இல்லத் திறப்பாளர் ஆயினர்.

முதியர் இல்லத்தின் திறப்பன்று மூன்று குடும்பத்தவரும் நான்கு தனி முதியருமாகப் **பதின்மர்** சேர்ந்தனர். அவர்களை நுழைவாயிலில் வைத்து வரவேற்று அமரச் செய்தனர். மாரியப்பர் வெற்றிச் செல்வியர், **இல்லப் பெயர்ப்பலகையைத்** திறந்து வைத்தனர். ஐயா பெருமாள், முதியர் முதியர் அல்லர்; மீள் இளமையர்; உள்ளம் இளமை இளமை! உடலுக்கு மூப்பே அன்றி உள்ளத்திற்கு என்றும் இளமையே!

நாங்கள் வானூர்தியில் இருந்து வைகறைப் போதில் வெளியே வந்தோம். புதியதோர் உலகுக்கு வந்ததாகத் தோன்றியது.

சாலைகள், சாலைசார் கட்டடங்கள், பசுமைக் காட்சி தரும் சோலைகள், எங்களை வயப்படுத்தின! இங்கு வாழ்பவர் பேறுபெற்றவர். இயற்கையும் செயற்கையும் கொட்டிக் கிடக்கும் காட்சி.

தோட்டத்து முதியோர் இல்லமோ, அமைதிச் சூழல் - அருமைத் தூய்மை! இவ்வில்லம் ஏற்படுத்தியவர்களோ, சிந்தையும் செயலும் தொண்டாகக் கொண்டவர். தங்கள் மக்களோடு இருப்பது போலும் கடமையாளர். **அவர்கள் கொண்ட வாழ்வு வழித்தூண்டலின் துலங்கலே இம்முதியோர் இல்லம்.**

தமிழகத்துக்கு வந்தபோதே மன்னார் அவர்களின் ஆழ்மனம் என்னால் உணரமுடிந்தது. அவர் கொண்டிருப்பது **ஆக்கச்சிந்தனை** என்பதைப் பழனியாரிடம் உரைத்தேன். அதை நேரில் கண்டு களிப்படைகிறேன். தொண்டு வாழ்க என வாழ்த்தி வணங்குகிறேன் என நிறைவு செய்தார்.

பின்னர் சில நாள்கள் இருந்து **பத்துமலை வானிலம், பினாங்கு, கோலாலம்பூர்** ஆகியவற்றைக் கண்டு மீண்டனர்.

# நகையே அழுகை 20

அழகம்மை மேலூர்க்குப் போனது, அவள் கணவன் குருவையாவிற்குக் கொண்டாட்டமாயிற்று. நில வருவாய்க்குத் தக்க குடும்பச் செலவு இல்லாததாலும், தான் தனியே அரும்பாவூர் வீட்டில் இருந்ததாலும் **தடையின்றிக் குடிக்கலானான்!**

திருமலை தனக்கும் பெரிய நன்மை செய்ததாக எண்ணிக் கொண்டான். அவன் மலையகக் குடியுரிமை பெற்றுவிட்டதால், **சொத்தெல்லாம் அழகம்மைக்கே என முடிவு பண்ணிவிட்டான்.**

தன் மகன் படிப்புச் செலவும் தனக்கு இல்லை என்னும் களிப்பும் சேர்ந்து கொள்ள, எந்தக் கடைக்கோ செல்ல, வேண்டியதை உண்ண, விரும்பியதைக் குடிக்க - என **முழுக் குடியனாகவே** ஆகிவிட்டான்.

அவன் மேலூர்க்கு வருவதில்லை; அழகம்மை, திருமலை, திருமணம் வரை மூடி மறைத்தாலும், பின்னர் அவன் செயல் தாங்காமல், பெற்றோரிடம் சொல்லி வருந்தலானாள். அவன் பேச்சும் சண்டையும் அவளால், அவனோடு இருக்க முடியாது ஆக்கியது. **உடன் இருக்கத் துயரம் என்றால் பிரியவும் துயரம்** எனத் தவித்தாள்.

பெருமாளையாவுக்கும் அவன் நிலை தெரிந்தது. குடிகாரனிடம் சொல்லித் திருத்துவதும், அவனோடு குடும்பத்தை இருக்க வைப்பதும் இடர்ப்பாடு என்னும் நிலையில் துயருற்றார்.

பழனியும் பச்சையும் சொல்லவும் முடியாமல் தாங்கவும் முடியாமல் தவித்தனர். மகிழ்வாகச் சென்ற குடும்ப வண்டி **குடை சாய்ந்தது போல் ஆயிற்று.**


அரும்பாவூரில் இருந்த நிலத்தை நம்பி, ஒருவர் அவன் கேட்ட போதெல்லாம் எழுதி வாங்கிக்கொண்டு கேட்ட தொகையைக் கொடுத்தார். சொத்தின் மதிப்பை ஒட்டிக் கடன்தொகை ஆகியதும், **இனிச் சொத்தை எழுதித் தந்தால் தான் பணம் என்றார்.** வேறு பண வாய்ப்பு குடிக்க இல்லாமையால், நிலத்தை எழுதித் தந்து, வந்த பணமும் குடியில் ஒழித்தான்.

குடித்து மயங்கித் தெருவில் அவன் கிடப்பது பொறுக்காமல், பக்கத்து வீட்டார் அவனைத் தூக்கி வந்து போட்டாலும், மயக்கம் தெளியாமலே தெருவில் முடிந்து போனான் எனச் செய்தி கேட்டுப் பழனி குடும்பத்தார் வந்து, அடக்கம் செய்து போயினர். எங்கோ இருக்கும் திருமலை, தென்னரசி, மன்னார் மங்கை, "**புகையும் குடியும் புகா முதியர் இல்லம் நடத்த, இங்கே அவன் குடும்பத்தில் நேரிட்ட துயரைச் சொல்ல முடியாமல் தவித்த நிலையில், திருமலை "அப்பா" என்று பேசியில் அழைத்தான்.**

"அப்பா, நீங்கள் **தாத்தா** ஆகியிருக்கிறீர்கள்! தென்னரசிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. தாயும் சேயும் நலமாக உள்ளனர். மருத்துவமனையிலேயே தென்னரசி தான் பெற்ற பிள்ளைக்குப் "**பழனிப்பெருமாள்**" எனப் பெயர் சூட்டிவிட்டாள்" என்றான். பெருமாளையாவிடம் பழனி சொன்னார். அவர் "**நகையே அழுகை**" என்ற தொல்காப்பியரை நினைத்தார். **இங்கு நிகழ்ந்ததைத் திருமலைக்குத் தெரிவிக்க வேண்டாம்** என்றார்.

"**தென்றலும் வாடையும் மாறி மாறி வரும். இயற்கையது தானே உலகம்.**" என்றார்.

"வாழிய நலனே! வாழிய நிலனே!"



– முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

“**கூடு**துறையில்” வரும் கதைமாந்தர்களான திருமலை, தென்னரசி, பச்சை, மாரியப்பர், மங்கை இன்ன பிறரும் தமிழ் நெறியினர்; வாழ்வினர் ஆவர். இவர்களின் ஆளுமைகளை ஐயா அவர்கள் அழகுபட அறிமுகப்படுத்தும் பாங்கும் நம்மை வியக்கவும் - நயக்கவும் செய்விக்கிறது.

புனைகதைக்குரிய மூலஊற்றாக “நட்பே காதலாதல்” “பிள்ளைகளும் பெற்றோரும் இசைந்து உற்றார் உறவு மகிழ மணம் புரிதல்” மணம் புரிதல் வகையால் முதிய பெற்றோரைப் பிரிந்து துயராக்குதல் இல்லாத பண்பாடு பேணல், மணங்கொண்ட குடும்பங்கள் கூடுதுறையாக விளங்கி வீடும் நாடும் மகிழ்வாதல், முதியரைக் காத்தல் என்பவற்றைக் கருவாகக் கொண்ட புனைவு இது.

- பெரியகுளம் புலவர் **து.இராசகோபால்** (அருளாளன்)

KUDUTHURAI
978 - 93 - 89384 - 48 - 2
வெற்றிமொழி
விலை ரூ. 60/-